மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 6 சுற்றம் : 3 மார்ச்சு 2018 விலை : ரூ.10/- ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி



## நெருங்கும் பேரழிவு-சாகர்மாலா



அந்த ஆபத்து இங்கு வந்து விடவேண்டாம்



பாலைவனமாகும் காவிரி டெல்டா

சேர்வோம் உயர்வோம் !

# செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கம்

அரசு பதிவு பெற்றது





விசவனுார்.வே.தளபதி
தலைவர்



எஸ்.ரங்கநாதன்.
செயலாளர்



எஸ்.வி.ஜெய்.இமயவரம்பன்
பொருளாளர்



எஸ்.ஜெபக்குமார்
அமைப்புச் செயலாளர்

ஊடகவியலாளர்கள் உரிமைகளைக் காப்போம் !

உலகம் வியக்க ஒன்றாய்த் திரள்வோம் !

## செய்தி ஊடக நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

உறுப்பினராகுங்கள், நமக்குரிய உரிமைகளையும் சலுகைகளையும் வென்றெடுப்போம்.

செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கம்
எண் 124, என்.டி.ஆர். தெரு, இரங்கராசபுரம்,
கோடம்பாக்கம், சென்னை 600 024.
தொலைபேசி: 044-42154408, அலைபேசி : 8056281973.

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly March 2018

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம் .ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,

செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** எம்.ஏ.,
**சரவணன்** பூவிருந்தவல்லி
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே. பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்

வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**

அலுவலக முகவரி
எண் 124, என்.டி.ஆர். தெரு, ரங்கராஜபுரம்,
கோடம்பாக்கம், சென்னை- 600 024
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

பாலைவனமாகும் காவிரி டெல்டா
– தலையங்கம்.................... 4

சிகரம் தொட்ட பெண் மருத்துவர்
– கோ. ஒளிவண்ணன்.................... 5

தமிழ்நாட்டு வேலைகள் தமிழர்களுக்கே வழங்க
தமிழர் வேலை உறுதிச் சட்டம் இயற்றுக்!....................7

நெருங்கும் பேரழிவு சாகர்மாலா
– பூவுலகின் நண்பர்கள்.................... 11

பாகிஸ்தானில் நாடாளுமன்ற மேல்சபை
உறுப்பினராக இந்துப் பெண் தேர்வு ....................14

தும்மல் குணமாகிட.................... 15

தமிழ்நாட்டில் மற்றுமொரு போர்முனையில்
இந்துத்துவா
– ஆழி. செந்தில்நாதன்.................... 17

உன் வாழ்க்கையை நீவாழ்!
– வாரியார் சுவாமிகள்.................... 19

பிள்ளையாரைப் போட்டுடைத்த பெரியார்.................... 20

அந்த ஆபத்து இங்கு வந்து விடவேண்டாம்.................... 21

அண்ணாவின் பெருந்தன்மை
– கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன்.................... 25

கடவுளைப் பற்றி காமராசர்.................... 26

தமிழ் இலக்கியமும் – தமிழர் அறிவியலும்.................... 29

உலகை ஆண்ட தமிழரின் வரலாறு.................... 32

தொழில் நுட்பச் சிகரம் கல்லணை.................... 34

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.

வாழ்கதமிழ்!



# பாலைவனமாகும் காவிரி டெல்டா



தமிழ்நாட்டை பாலைவனமாக்கிப் பார்க்க வேண்டும் என்ற தீராத வெறியோடு பல கொடுந் திட்டங்களை தமிழகத்தில் கொண்டு வந்து நுழைத்துக் கொண்டிருக்கிது அதிகார வர்க்கம். ஆதிக்க வர்க்கம், அதிகார வர்க்கமாக மாறியதன் விளைவு? அழிவு மிக விரைவாக பயணப்பட்டு தமிழகம் வந்து சேர்ந் திருக்கிறது. மரக்காணம் முதல் வேளாங்கண்ணி வரை 24 ஹைட்ரோ கார்பன் கிணறு களுக்கு நடுவண் அரசு அனுமதி அளித்திருக்கிறது.

உள்நாட்டின் வளத்தைக் கொண்டு எரிபொருட் களை நாமே உற்பத்தி செய்வது என்ற நிலையில் உழவையும், மக்களின் வாழ்வாதாரத்தையும் அழிக்க மீத்தேன், சேல் கேஸ் போன்றவற்றை எடுப்பதற்காக தமிழகத்தில் பல இடங்களை நடுவண் அரசு தேர்வு செய்திருக்கிறது. ஏற்கெனவே ஓ.என்.ஜி.சி செய்து வந்த பணிகள் தற்போது தனியார் நிறுவனங்களுக்கு கொடுக்கப்படுவதாகவும், அந்நிய நாட்டு நிறுவனங் களும் இதில் கலந்து கொள்ளலாம் என்ற நிலையும் இருப்பதாகத் தெரிகிறது.

நெடுவாசல், கதிராமங்கலம் பகுதிகளில் இந்த அழிவுப் பணிகளை தனியார் நிறுவனங்களுக்கு நடுவண் அரசு கொடுத்தது. இத்திட்டத்தின் விளைவு களைப் புரிந்து கொண்ட மக்கள் தொடர்ந்து இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள். இதற்குப் பின்னால் நாடுமுழுவதும் 65 இடங்களில் இப்பணிகள் செய்ய நடுவண் அரசு அனுமதி அளித்திருக்கிறது. அதில் 24 இடங்கள் தமிழ்நாடு புதுச்சேரியில் எல்லைக்குள் வருகின்றன. இப்பணிகளைச் செய்வதற்கு பன்னாட்டு நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்தங்களை பெறும் வேலைகளும் நடந்து வருகின்றன. இதுமட்டுமல்லாமல் விதிமுறைகள் தளர்த்தப்பட்டு எளிதாக்கப்பட்டிருக்கின்றனவாம்.

கடலூர் மாவட்டத்தில் தியாகவல்லி தொடங்கி நாகை மாவட்டம் வைத்தீஸ்வரன் கோவில் வரையிலும் உள்ள வயல்வெளிகளில் பத்துக் கிணறுகளும் மரக்காணம் முதல் கடலூர் வரை உள்ள கடற்பகுதிகளில் நான்கு கிணறுகளும், சிதம்பரம் அருகே பரங்கிப்பேட்டை முதல் வேளாங்கண்ணியை அடுத்த புஷ்பவனம் வரையிலான கடற்பரப்பில் பத்துக் கிணறுகளும் என்று 24 இடங்களில் ஹைட்ரோ கார்பன் எடுப்பதற்கான வேலைக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. நீரியல் விரிசல் என்ற ஆபத்தான முறையில் இந்தக் கிணறுகள் தோண்டப் படப் போவதாகவும் தெரிகிறது.

ஒரு காலத்தில் இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களிலிருந்து இருந்து பஞ்சம் பிழைப்பதற்காக சோழ நாட்டிற்கு மக்கள் பயணப்பட்டதை அறிந்திருக்கிறோம். அந்தச் சோழநாட்டை சுடும் பாலைவனமாக்கப் புறப்பட்டிருக்கிறது நடுவண் அரசு. சோழ நாட்டு மக்கள் பஞ்சம் பிழைக்க வேறு ஊர் களுக்குச் செல்லும் அவல நிலையை கண்டுகளிக்க துடிக்கிறது அரசு. கண்ணை விற்று சித்திரம் வாங்க நினைக்கும் அரசுக்கு தன் நினைவைக் கொண்டுவரும் பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு.

தங்களது வயல் நிலங்களை எண்ணெய்க்கு தாரை வார்த்துவிட்டு, உணவுக்கு அண்டை நாடுகளிடம் கையேந்தும் நிலையை தமிழர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். உலக மக்கள் எல்லோரையும் உறவு என்று எண்ணி விருந்தோம்பிய தமிழினம் ஒருபோதும் பிறரை எதிர்பார்த்து வயிறு வளர்க்காது என்பதை நடுவண் அரசு புரிந்து செயல்பட வேண்டும். மருத நிலத்தை பாலையாக்கத் துடிக்கும் பாவிகளுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டியது பழமையும் பண்பாடும் மிக்க தமிழினத்தின் முதல் பணியாக இருக்க வேண்டும்.



# சிகரம் தொட்ட பெண் மருத்துவர்

**கோ. ஒளிவண்ணன்**

இங்கிலாந்து நாட்டில் 1821ஆம் ஆண்டு பிரிஸ்டல் என்கிற நகரின் அருகில் உள்ள ஊரில் பிறந்த எலிசபெத் ப்ளாக்வெல் என்கிற இளம் பெண்ணுக்கு மருத்துவர் ஆக வேண்டும் என்கிற கனவொன்று இருந்தது. அக்கனவினை நிறைவேற்றிக் கொள்ள அவர் எதிர் கொண்ட சவால்கள் சொஞ்ச நஞ்சமல்ல. உடன்பிறந்தோர் எட்டுப் பேருடன் அப்பா அம்மா என பெரிய குடும்பமாய் பிரிஸ்டல் நகரில் சுகமாய் வாழ்ந்து வந்தனர். தந்தை தம் மக்களுக்கு முடிந்தவரை எல்லா வசதிகளும் செய்து கொடுத்தார். பெண் விடுதலை, சமூகநீதி இவைகளைக் குறித்தும் அறிவு புகட்டினார்.

அக்காலகட்டத்தில் ஊரெங்கும் பரவியிருந்த காலரா நோயின் கொடுமைக்கு அஞ்சி, குடும்பம் 1832இல் அமெரிக்காவில் நியூயார்க் பகுதிக்கு குடிபெயர்ந்தது. பதினொரு வயது நிரம்பிய எலிசபெத் படிப்பில் சுட்டியாக விளங்கினார். பிரஞ்சு, ஜெர்மனி மொழிகள், இசை, ஓவியம் என பல்துறைகளிலும் சிறந்து விளங்கினார். எதிர்பாராத நேரத்தில், தந்தை இறந்து போகிறார். குடும்பம் தீராத வறுமையில் வீழ்கிறது. இருந்தாலும் அம்மா ஹன்னா, எலிசபெத் மற்றும் இரு மூத்த சகோதரிகளுடன் பெண்களுக்கான தனியார் பிரெஞ்சுப் பள்ளிக்கூடம் தொடங்கி, கிடைத்த சொற்ப வருமானத்தில் குடும்பத்தை நடத்தினர். சகோதரர்கள் வளர்ந்து சம்பாதிக்கும் காலம்வரை பள்ளிக்கூடம் நடந்தது.

எலிசபெத்தின் தொழியொருவர், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறக்கும் தருவாயில், “ஆண் மருத்துவர்களிடம் சிகிச்சை பெறுவது பெரும் சிரமமாக இருந்தது. பெண் மருத்துவர்கள் இருந்திருந்தால், நன்றாக இருந்திருக்கும், நீ மருத்துவம் படிக்க வேண்டும்” என

வேண்டுகோள் விடுத்தார். எலிசபெத் துக்கு விருப்பம் இல்லையென்றாலும், தோழியின் விருப்பத்தை நிறைவேற்ற மருத்துவம் படித்தே தீருவது என தீர்மானிக்கிறார். அதற்கு வேறு ஒரு காரணமும் இருந்தது. படிப்பதாகக் கூறினால்தான், திருமணத்தை தள்ளிப் போடலாம். இது நடந்தது 1845ஆம் ஆண்டு.

மருத்துவராவதற்கு எங்கு படிக்க வேண்டும் என்கிற தகவல் எலிசபெத்துக்குத் தெரியாது. குடும்பத்திற்கு வேண்டிய மருத்துவர்களிடம் ஆலோசனை கேட்டார். அவர்கள் அது நடைமுறையில் ஒத்து வராது, காரணம், பெண்கள் பல தடைகள் தாண்ட வேண்டும். அதற்கான தகுதியும், திறமையும், தைரியமும் அற்றவர்கள் பெண்கள் என்று கூறி எலிசபெத்தின் ஆசைக்கு முட்டுக்கட்டை போட்டனர். வேறு யாராக இருந்தாலும் மனந்தளர்ந்து மருத்துவக் கனவை கலைத் திருப்பார்கள். அனால், எலிசபெத் எப்படியாவது படித்தே தீருவது என்று சபதம் மேற்கொள்கிறார். மருத்துவம் படிக்க அன்றைய காலத்தில் மூவாயிரம் அமெரிக்க டாலர்கள் தேவையாக இருந்தது. கையில் பணம் எதுவும் இல்லை. ஆனால், எலிசபெத் முயற்சியை கைவிடவில்லை. இரண்டாண் டுகள் ஒரு பள்ளியில் மாணவர்களுக்கு இசை சொல்லிக்கொடுத்து, சிறுகச் சிறுக பணம் சேர்த்து மருத்துவக்கல்லூரியில் சேர விண்ணபப்பிக்கிறார்.

பிலடெல்பியா மாநிலத்திலுள்ள நான்கு புகழ் பெற்ற மருத்துவக்கல்லூரிகளுக்கு விண்ணப்பித் தார். பெண் என்ற ஒரே காரணத்துக்காக விண்ணப்பங் களை தள்ளுபடி செய்துவிடுகின்றனர். சலிக்காது, மேலும் இருபத்தியொன்பது கல்லூரிகளுக்கு விண்ணப் பித்தார். துரதிருஷ்டவிதமாக ஒரு கல்லூரி கூட அவரது விண்ணபத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பெண்கள், எல்லா சமூகத்திலும் காலங்காலமாக புறக் கணிக்கப்பட்டவர்கள். கல்வி மறுக்கப்பட்டது. ஆண்கள் அளவிற்கு அறிவும், திறமையும் கிடையாது என்பதெல்லாம் அவர்கள் மீது கட்டமைக்கப்பட்ட பிம்பங்கள்.

காலம் விரயமாகிறது என்றுணர்ந்த எலிசபெத், தெரிந்த மருத்துவர் ஒருவரிடம் உடற்கூறியல் பாடம் படித்தார். தொடர்ந்து பிரபலம் இல்லாத கல்லூ ரிகளுக்கு விண்ணப்பித்தார். நியூயார்க் மாநிலத்தி லுள்ள ஜெனீவா மருத்துவக் கல்லூரியில இடம் கிடைத்தது. ஆனால் மற்ற ஆண் மாணவர்களிடம், கல்லூரியில் பெண் மாணவியை அனுமதிக்கலாமா என்று நிர்வாகம் கருத்துக் கேட்டது. இது ஏதோ நகைச்சுவை என்றெண்ணி, மாணவர்கள் விளையாட் டாக 'சரி' என்றார்கள். எலிசபெத் மருத்துவக் கல்லூ ரியில் சேர்ந்துவிட்டார். வேற்றுக் கிரகவாசி போல ஆண்களின் கண்களுக்குப் புலப்பட்டார். புறக்கணிப் பும், எள்ளல்களும், அவமானங்களும் தொடர்ந்தன. சிறிதும் அஞ்சாமல், அவைகளை உரமாக்கிக் கொண்டு படிப்பில் முழுக் கவனம் செலுத்தினார்.

1949ஆம் ஆண்டு தனது இருபத்தியெட்டாம் வயதில் வகுப்பிலேயே முதல் மாணவியாக தேர்ச்சி பெற்றார். இருந்த போதிலும், அவரை மருத்துவராக பணியாற்ற மருத்துவக் குழு அனுமதிக்கவில்லை. மனமொடிந்த நிலையில், பிரெஞ்சுத் தலைநகர் பாரிசில் புகழ் பெற்ற மருத்துவமனையொன்றில் மகப்பேறு இயலில் மேல்படிப்பு மாணவராகச் சேர்ந்துக் கொள்ள வாய்ப்புக் கிடைத்தது. ஆனால், மருத்துவர் என்கிற தகுதி தர முடியாது, வேண்டுமானால் பேறுகால உதவி யாளராக இருக்கலாம் என்று கூறிவிட்டனர். ஏமாற்ற மாக இருந்தாலும் இதுவாவது கிடைத்ததே என்று எலிசபெத் ஏற்றுக் கொண்டார். மீண்டும் சோதனை, இம்முறை உடல் சார்ந்தது. ஒரு கண்ணில் சீழ் பிடித்து சிகிச்சை பயனின்றி பார்வை போனது. அறுவைச் சிசிகச்சை நிபுணர் ஆக வேண்டும் என்கிற கனவு அத்தோடு தகர்ந்தது. படிப்பை பாதியில் நிறுத்தி இங்கிலாந்து நாட்டில் மருத்துவமனை ஒன்றில் பயிற்சி மாணவராகச் சேர்ந்தார்.

1853ஆம் ஆண்டு எலிசபெத்தின் சகோதரி எமிலி மருத்துவப் படிப்பை முடித்தார். தான் இரட்டிப்புப் பலம் பெற்றதாக கருதினார். சகோதரிகள் இருவரும் நியூயார்க் நகரில் பெண்கள், குழந்தைகளுக்கான மருத்துவமனை தொடங்க முயற்சித்தனர். மருத்துவ மனைக்கு இடமளிக்க யாரும் முன்வரவில்லை. பல் வேறு சிரமங்களுக்குப் பின் மருத்துவமனையைத் தொடங்கினர். இவர்களை நம்பி சிகிச்சை பெற ஒருவரும் வரவில்லை. போராடி கொஞ்சம் கொஞ்ச மாக வளர்ச்சியை காண்கின்றனர். சிகிச்சையளிப்பது மட்டுமின்றி எதிர்காலத்தில் பல பெண் மருத்துவர் களை உருவாக்க மாணவிகளுக்கு பயிற்சியளிக்கின் றனர். மெதுமெதுவாக வளர்ந்து பத்து ஆண்டுகளில் மருத்துவமனை பெரும் சிறப்புப் பெற்றது. அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளில் அவர் தொண்டு விரிவடை கிறது. 1879ஆம் ஆண்டு மருத்துவப் பணியிலிருந்து விலகி துறை சார்ந்த புத்தகங்களை எழுதிக் குவித்தார்.

1907ஆம் ஆண்டு தனது 86வது வயதில் நோயால் பாதிக்கப்பட்டு மரணம் அடைந்தார். ஸ்காட்லாந்து நாட்டில் கில்முன்னில் அவரது உடல் புதைக்கப் பட்டது. அவர் இறக்கும்போது இவ்வுலகில் ஏழாயிரம் பெண் மருத்துவர்கள் உருவாகியிருந்தார்கள். யாரும் அதுவரை பயணிக்காத புதுப்பாதையினை தேர்ந் தெடுத்து வெற்றியும் கண்டார். அவரால், எண்ணற் றோர் பயனடைந்தனர். எலிசபெத் போன்றே நமது மண்ணில் பல போராட்டங்களுக்குப் பின் முதல் பெண்மணியாக முத்துலெட்சுமி ரெட்டி மருத்துவம் படித்தது நமக்கு பெருமைதானே.

●



**தீர்மானம் 1.**

தமிழ்நாடு அரசுப் பணிகளுக்கு இந்தியாவின் எல்லா மாநிலங்களைச் சேர்ந்தவர்களையும், பூட்டான், நேப்பாளம் போன்ற அயல் நாடுகளைச் சேர்ந்தவர்களையும், தமிழ்நாடு அரசு அழைப்பது மக்கள் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம் 9,351 பணி இடங்களுக்கான 4 ஆம் பிரிவு (குரூப் 4) எழுத்துத் தேர்வை 11.02.2018 அன்று நடத்துகிறது. இதற்கான 14.11.2017 நாளிட்ட அறிவிக்கையில், இந்தியாவின் எல்லா மாநிலங்களைச் சேர்ந்தவர்களும், பூட்டான், நேப்பாளம் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களும் பாக்கித்தான், வங்காளதேசம், திபெத், மியான்மர் போன்ற நாடுகளிலிருந்து புலம் பெயர்ந்தவர்களும் எழுதலாம். வென்றவர்கள் தமிழ்நாடு அரசுப் பணிகளில் சேரலாம் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

ஏற்கெனவே, தமிழ்நாட்டில் இயங்கும் இந்திய அரசின் அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் 80 விழுக்காட்டுக்கும் மேலாக வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு வேலை தரப்படுகிறது. சொந்த மண்ணிலேயே தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். இவற்றிற்கப்பால் தமிழ்நாட்டில் திரும்பிய பக்கமெல்லாம் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களே, பல்வேறு வேலைகளில் நிரம்பி வழிகின்றனர்.

இந்த அவலம், வேறு எந்த மாநிலத்திலும் இல்லை! மராட்டியம், கர்நாடகம், குசராத், மேற்கு வங்கம், இராசசுதான், அரியானா உள்ளிட்ட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் மாநில அரசுப் பணிகள் முழுவதும் நூற்றுக்கு நூறு அந்தந்த மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கே வழங்கிடச் சட்டங்கள் இருக்கின்றன. மாநில அரசுப் பணிகளில் வெளி மாநிலத்தவர்கள் சேர்க்கப்படுவதில்லை!.

இம்மாநிலங்களில் இயங்கும் இந்திய அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் 80 விழுக்காடு முதல் 90 விழுக்காடு வரை அந்தந்த மாநில மக்களுக்கே வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்று சட்டங்களும், அரசு ஆணைகளும், தொழில் கொள்கைத் திட்டங்களும் செயலில் உள்ளன.

எடுத்துக்காட்டாக, தங்கள் மாநிலங்களில் இயங்கும் இந்திய அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் தங்கள் மாநில மக்களுக்கு 80 விழுக்காடு வேலை வழங்க வேண்டுமென்று மகாராட்டிர அரசும், 90 விழுக்காடு வேலை வழங்க வேண்டு

# தமிழ்நாட்டு வேலைகள் தமிழர்களுக்கே வழங்க தமிழர் வேலை உறுதிச் சட்டம் இயற்றுக!”

## தமிழ்த்தேசியப் பேரியக்கம் நடத்திய சிறப்பு மாநாட்டில் தீர்மானம்

மென்று கர்நாடக அரசும், 85 விழுக்காடு வேலை வழங்க வேண்டுமென்று குசராத் அரசும் சட்டமியற்றி உள்ளன.

அதுபோன்று, தமிர்நாடு அரசும் தமிழ்நாட்டு வேலைகளில் தமிழர்களுக்கே முன்னுரிமை வழங்க கீழ்வரும் உள்ளீடுகள் கொண்ட "தமிழர் வேலை உறுதிச் சட்டம்" உடனடியாக இயற்ற வேண்டும் என இச்சிறப்பு மாநாடு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

தமிழர்கள் வேலை உறுதிச் சட்டம் உள்ளீடுகள்

1. இச்சட்டம் "தமிழ்நாடு மக்கள் பணி அமர்த்தச் சட்டம்" எனப்படும்.

2. இச்சட்டம் தமிழ்நாடு முழுமைக்கும் பொருந்தும்.

3. இச்சட்டம் குறிப்பிடும் தமிழ்நாட்டு மக்கள் என்பவர்கள்,

விண்ணப்பதாரரின் பெற்றோர் தமிழ்நாட்டில் தொடர்ந்து 25 ஆண்டுகள் வசிப்போராகவும்,

விண்ணப்பதாரர் பிறந்ததிலிருந்து 15 ஆண்டுகள் தமிழ்நாட்டில் வசிப்போராகவும்,

எட்டாம் வகுப்பு தமிழ் பாடத்தில் தேர்ச்சி பெற்றிருப்போர் அல்லது அதற்குக் கீழ் கல்வித் தகுதி பெற்றோராயின் குறைந்தபட்சம் தமிழ் எழுத படிக்க பேசத் தெரிந்தோராகவும்,

அரசு நிறுவனம் நடத்தும் தமிழ்ப் பாடத் தேர்வில் தேர்ச்சி பெற்றோராகவும் இருப்போரைக் குறிக்கும்.

பணி அமர்த்தம் என்பது,

தமிழ்நாடு அரசு அலுவலகங்கள், தமிழ்நாடு அரசு பொதுத்துறை நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புகள், தமிழ்நாட்டில் இயங்கும் நடுவண் அரசு மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் தொழிலகங்களில் ஊதியப் பயனுக்காக செய்யப்படும் நிரந்தர மற்றும் நிரந்தரமற்ற பணியமர்த்தும் அனைத்தையும் குறிக்கும்.

தமிழ்நாடு பணி அமர்த்தக் கண்காணிப்பு ஆணையம் என்பது,

இச்சட்டம் செயல்படுவதைக் கண்காணித்து, தேவையான ஆணைகள் வழங்க தமிழ்நாடு அரசு அமைக்கும் ஆணையத்தைக் குறிக்கும்.

மாவட்டக் கண்காணிப்புக் குழு என்பது,

கண்காணிப்பு ஆணையத்தின் கீழ் மாவட்ட அளவில் செயல்படும் அதிகாரம் பெற்ற குழுவைக் குறிக்கும்.

4. தமிழ்நாடு அரசு நடத்தும் பணியாளர் தேர்விலும், பிற அனைத்துத் தேர்வுகளிலும் தமிழ் நாட்டு மக்களுக்கு 100க்கு 100 இடம் வழங்கப்படும்.

5. தமிழ்நாடு அரசின் கீழ் இயங்கும் பொதுத்துறை மற்றும் கூட்டுறவுத்துறை பணிகள் அனைத்திலும், தமிழ்நாட்டு மக்களுக்கு 100க்கு 100 இடம் வழங்கப் படும்.

6. தமிழ்நாட்டின் இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல் பணி உள்ளிட்ட அனைத்து இந்தியப் பணி களிலும் தமிழ்நாட்டு மக்களே 100க்கு 100 அமர்த்தப் படுவர்.

7. (அ) தமிழ்நாட்டில் இயங்கும் தனியார்துறை நிறுவனங்கள் மற்றும் தொழிலகங்களில், நிரந்தர வேலை வாய்ப்புகளிலும், நிரந்தரமற்ற வேலை வாய்ப்புகளிலும் 90 விழுக்காடு தமிழ்நாட்டு மக்களே அமர்த்தப்படுவர். இவ்வாறான வேலை வாய்ப்புகளில் இப்போது 90 விழுக்காட்டுக்குக் கீழ் இருந்தால், 90 விழுக்காடு அளவை எட்டும் வரை, முழுவதும் தமிழ்நாட்டு மக்களுக்கு வேலை வழங்க வேண்டும்.

(ஆ) தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிலகங் களில் உயர் தொழில் நுட்பத்தினர் தேவைப்படும் பணிகளிலும், உயர் அதிகாரிகள் பணிகளிலும் அரிதிலும் அரிதாக கண்காணிப்பு ஆணையத்தின் முன் இசைவுடன் இந்த வரம்புக்கு விலக்குப் பெறலாம்.

8. (அ) தமிழ்நாட்டில் இயங்கும் இந்திய அரசு அலுவலகங்கள் மற்றும் இந்திய அரசு பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில், நிரந்தர வேலைகளிலும், நிரந்தரமற்ற வேலைகளிலும் 90 விழுக்காடு, தமிழ் நாட்டு மக்களே அமர்த்தப்பட வேண்டும். இவ்வா றான வேலை வாய்ப்புகளில் இப்போது 90 விழுக் காட்டுக்குக் கீழ் இருந்தால், 90 விழுக்காடு அளவை எட்டும் வரை, முழுவதும் தமிழ்நாட்டு மக்களுக்கு வேலை வழங்க வேண்டும்.

(ஆ) இந்திய அரசு நிறுவனங்கள் மற்றும் தொழி லகங்களில் உயர் தொழில் நுட்பத்தினர் தேவைப்படும் பணிகளிலும், உயர் அதிகாரிகள் பணிகளிலும் அரிதிலும் அரிதாக கண்காணிப்பு ஆணையத்தின் முன் இசைவுடன் இந்த வரம்புக்கு விலக்குப் பெறலாம்.

9. இச்சட்ட வரையறுப்பின்படி தமிழ்நாட்டு மக்கள் யார் என்பதை உறுதி செய்து கொள்ள பிறப்புச் சான்றிதழ், பள்ளிச் சான்றிதழ், அரசு நடத்தும் மொழித் தகுதித் தேர்வுச் சான்றிதழ், குடும்ப அட்டை, வருவாய் வட்டாட்சியர் சான்று மற்றும், வேலை கோருவர் அல்லது அவரது பெற்றோர் அல்லது காப்பாளரின் வாக்காளர் அட்டை ஆகியவற்றில் ஒன்று, இருக்க வேண்டும்.

10. தமிழ்நாடு அரசுப் பணி, பொதுத்துறைப் பணி, கூட்டுறவுப் பணி, தனியார் நிறுவன வேலை, இந்திய அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுத்துறை நிறு வனங்களின் வேலை ஆகிய அனைத்திலும் எட்டாம் வகுப்புத் தமிழ்ப் பாடத்தில் தேர்ச்சி அல்லது அதற்குக் கீழ் கல்வித் தகுதி பெற்றோருக்கு குறைந்தபட்சம் தமிழ்

எழுத படிக்க பேசத் தெரிந்திருப்பது மற்றும் அரசு நடத்தும் தமிழ்த் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத் தல் வேண்டும்.

11. இச்சட்டத்தின் செயலாக்கத்தைக் கண்காணித்த, தேவையான ஆணையிட கீழ் வரும் உறுப்பினர்கள் கொண்ட தமிழ்நாடு மக்கள் வேலைவாய்ப்பு ஒதுக்கீடு கண்காணிப்பு ஆணையத்தை, (சுருக்கமாக கண் காணிப்பு ஆணையத்தை) தமிழ்நாடு அரசு நிறுவும்.

(அ) கண்காணிப்பு ஆணையத்தின் தலைவராக தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலாளர் இருப்பார்.

(ஆ) தொழில்துறைச் செயலாளர், தொழிலாளர் துறைச் செயலாளர், தொழிலாளர் ஆணையர், கூட்டுறவுத்துறைச் செயலாளர், உள்துறைச் செயலா ளர் மற்றும் அரசால் நியமிக்கப்படும் இருவர் இந்த ஆணையத்தின் உறுப்பினர்களாக இருப்பர்.

(இ) இந்த உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்றாண்டுகளாகும்.

(ஈ) இந்த ஆணையத்தின் அமைவிடம், இதன் பணியாளர்களின் எண்ணிக்கை, அவர்களது ஊதியம் போன்றவை குறித்து தமிழ்நாடு அரசு அறிவிக்கை வெளியிடும்.

12. மாவட்டக் கண்காணிப்புக் குழு

மேற்சொன்ன கண்காணிப்பு ஆணையத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டு, மாவட்டம் தோறும், மாவட்டக் கண்காணிப்புக் குழுக்களை தமிழ்நாடு அரசு நிறுவும்.

(அ) மாவட்டக் கண்காணிப்புக் குழுவின் தலைவராக மாவட்ட ஆட்சியர் இருப்பார்.

(ஆ) மாவட்டத் தொழிற்சாலை ஆய்வாளர், தொழிலாளர் ஆய்வாளர், மாவட்ட தொழில்துறை இயக்குநர், மாவட்ட கூட்டுறவுப் பதிவாளர், மாவட் டக்காவல் கண்காணிப்பாளர், அம்மாவட் டத்தின் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் இக்குழுவில் இருப்பார்கள்.

(இ) இந்த உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்றாண்டுகளாகும்.

(உ) இந்த ஆணையத்தின் அமைவிடம், இதன் பணியாளர்களின் எண்ணிக்கை, அவர்களது ஊதியம் போன்றவை குறித்து தமிழ்நாடு அரசு அறிவிக்கை வெளியிடும்.

(ஊ) இச்சட்ட செயலாக்கம் குறித்து, கண்காணிப்பு ஆணையத்தின் அறிவுரைக்கு இணங்க மாவட்டக் கண்காணிப்புக் குழு ஆணைகள் பிறப்பிக்கும். இந்த ஆணைகளின் மீது மறுப்பு இருந்தால், தொடர்புடைய நிறுவனங்கள் அல்லது பாதிக்கப்படும் வேலை கோருவோர் கண்காணிப்பு ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்யலாம்.

**தீர்மானம் 2**

“தமிழ்நாடு அரசுப் பணித் தேர்வாணையத் தேர்வில் வெளி மாநிலத்தவரை நீக்கி தமிழ்நாட்டு மாணவர்களை மட்டுமே அனுமதிக்க வேண்டும்“

தமிழ்நாடு அரசுப் பணித் தேர்வாணையம் 9,351 பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வை 11.02.2018 அன்று நடத்துகிறது. இத்தேர்வில் இந்தியாவின் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களும், நேப்பாளம், பூட்டான் ஆகிய நாட்டவர்களும், பாக்கித்தான், வங்காளதேசம், திபெத், மியான்மர் உள்ளிட்ட நாடுகளிலிருந்து புலம் பெயர்ந்து வந்திருப்பவர்களும் பங்கு பெறலாம். தேர்வில் வென்றவர்கள் தமிழ்நாடு அரசுப் பணிகளில் சேரலாம் என்று அறிவித்திருப்பது தமிழ்நாட்டு மக்களிடம் கொந்தளிப்பை ஏற்படுத்தி யுள்ளது.

உயர்கல்வியில் முன்னேறியுள்ள தமிழ்நாட்டில் உயர்கல்வித் தகுதியோடு பல இலட்சம் இளையோர் தகுதிக்குரிய வேலை தேடிக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில், தமிழ்நாடு அரசுப் பணிகளிலேயே வெளி மாநிலத்தவர்களையும் வெளி நாட்டவர்களையும் சேர்ப்பது தமிழினத்திற்கு இழைக்கும் அநீதியாகும்! தமிழ்நாட்டு இளம் ஆண்கள், பெண்கள் ஆகியோரின் வாழ்வுரிமையைப் பறிப்பதாகும்.

தமிழ்நாடு அரசு இந்த அநீதியான முடிவை திருத்திக் கொள்ள வேண்டும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்விற்கு விண்ணப் பித்துள்ள வெளி மாநிலத்தவரையும், வெளி நாட்டி னரையும் தேர்வில் அனுமதிக்கக் கூடாது என்றும், இருப்பிடச் சான்றின் அடிப்படையில் தமிழ்நாட்டு தேர்வர் மட்டுமே இத்தெர்வெழுத அனுமதிக்க வேண்டும் என்றும் இச்சிறப்பு மாநாடு தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது!.

**தீர்மானம் 3**

“தமிழ்நாட்டில் வெளி மாநிலத்தவர் சொத்து வாங்கத் தடை விதிக்க வேண்டும்.

சென்னை, கோவை, மதுரை, திருச்சி போன்ற மாநகரங்களில் மட்டுமின்றி, நகராட்சி நகரங்களிலும், ஊராட்சிப் பகுதிகளிலும்கூட வடமாநிலங்களைச் சேர்ந்தவர்களும், அண்டை மாநிலங்களைச் சேர்ந்தவர் களும் நிலங்களையும், மனைகளையும், கட்டிடங் களையும் வாங்கிக் குவித்து வருகிறார்கள்.

மொழி இன மாநிலமாக 1956இல் “தமிழ்நாடு“ அமைக்கப்பட்டது. தமிழ்நாடு தமிழர்களின் வரலாற் றுத் தாயகம் என்பதற்கான சட்ட ஏற்பு ஆகும்! இச் சட்டத்தின் நோக்கத்தையே வெளி மாநிலத்தவர் தமிழ் நாட்டில் நிலங்களும் கட்டடங்களும் வாங்கிக் குவிப்பது சீர்குலைத்துவிடும்!.

அந்தந்த மொழி மக்களின் தாயக உரிமையைப் பாதுகாக்கும் நோக்கோடுதான், காசுமீர், சிக்கிம், நாகாலாந்து, மிசோரம், அருணாச்சலப்பிரதேசம் உள்ளிட்ட பல மாநிலங்களில் வெளி மாநிலத்தவர் மற்றும் வெளி நாட்டவர் நிலம் மனை கட்டடங்கள் போன்ற அசையாச் சொத்துகள் வாங்கவும், நீண்ட காலக் குத்தகை பெறவும் தடைச் சட்டங்கள் செயல் பாட்டுக்கு வருகின்றன. கர்நாடகத்தில் வெளி மாநிலத்தவர் விளை நிலங்களை வாங்கிட தடைச் சட்டம் இருக்கிறது. இச்சட்டங்கள் அனைத்தும் இந்திய அரசு மற்றும் இந்திய உயர் நிலை நீதிமன்றங் களின் ஏற்பிசைவோடுதான் செயல்படு கின்றன. இதுபோன்ற சட்டம் தமிழ்நாட்டிலும் வேண்டும். தமிழ்நாடு அரசு, வெளி மாநிலத்தவர்கள் மற்றும் வெளி நாட்டவர்கள் தமிழ்நாட்டில் விளை நிலம், மனை, கட்டடங்கள் வாங்குவதைத் தடை செய்து சட்டமியற்ற வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது!.

**தீர்மானம் 4**

“தமிழ்நாட்டில் வெளி மாநிலத்தவர்களுக்கு வாக்காளர் அட்டை குடும்ப அட்டை வழங்கக் கூடாது!“

அன்றாடம் வரம்பின்றி, தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் வெளி மாநிலத்தவர்கள் குவிந்து வருகிறார்கள். இந்த வரம்பற்ற குடியேற்றம் மொழி இனவழி மாநிலமாக தமிழ்நாடு உருவாக்கப்பட்டதின், நோக்கத்தையே சீர்குலைத்து தமிழ்நாட்டை கலப்பின மண்டலமாக மாற்றிவிடும் ஆபத்து உள்ளது.

2011ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப் பின் படி, தமிழ்நாட்டில் சற்றொப்ப 44 இலட்சம் வெளி மாநிலத்தவர்கள் அண்மையில் குடியேறியுள்ளனர். இப்போக்கு இப்போது இன்னும் அதிகமாயிருக்கும்!.

இந்நிலையில், வெளி மாநிலங்களிலிருந்து இங்கு வருபவர்களுக்கு வாக்காளர் அட்டை வழங்குவது தமிழ்நாட்டின் தனித்தன்மையான அரசியலிலும், செயற்கையான குறுக்கீட்டை ஏற்படுத்திவிடும்!. வெளி மாநிலத்திலிருந்து வருவோருக்கு குடும்ப அட்டை வழங்குவது, அவர்களை இங்கேயே நிலைப்படுத்து வதற்கான அடிப்படை ஆவணமாக அமைந்து விடும். தமிழ்நாட்டின் இனச்சமநிலையைக் குலைத்துவிடும்!.

சாசுமீர், அசாம், திரிபுரா, மேகாலயா உள்ளிட்ட மாநிலங்களில் வெளி மாநிலத்தவர்களுக்கு வாக்காளர் அட்டை, குடும்ப அட்டை வழங்கப்படுவதில்லை. அருணாச்சலப்பிரதேசம், நாகாலாந்து, மிசோரம் போன்ற மாநிலங்களில் வெளி மாநிலத்தவர் நுழைவ தற்கு கட்டுத்திட்டங்கள் விதிக்கும் “உள் அனுமதிச் சீட்டு“ (இன்னர் லைன் பெர்மிட்) முறை செயலில் உள்ளது.

தமிழ்நாட்டைத் தமிழர் தாயகமாகப் பாதுகாப் பதற்கு இதுபோன்ற கட்டுப்பாடுகள் அவசியமான தாகும். எனவே, தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டிற்கு வரும் வெளி மாநிலத்தவர்களுக்கு குடும்ப அட்டை வழங்கக் கூடாது. இந்தியத் தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டிற்குள் தற்காலிகமாக வந்தவர்களுக் கெல்லாம் வாக்காளர் அட்டை வழங்கக் கூடாது.

மேற்கண்ட இரு கோரிக்கைகளையும் இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் நிறைவேற்ற வேண்டு மென்று இம்மாநாடு கோரிக்கை வைக்கிறது!.

**தீர்மானம் 5**

“தமிழ்நாட்டிற்கு நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்கும் சட்டத்திற்கு இந்திய அரசு உடனடியாக இசைவளிக்க வேண்டும்.“

தமிழ்நாட்டு மருத்துவக் கல்லூரி இடங்களுக்கு இந்திய அரசு “நீட்” என்ற தகுதிகாண் மற்றும் நுழைவுத் தேர்வு நடத்துவது, தமிழர்களுக்கு எதிரான இன ஒதுக்கல் ஆகும்.!

தமிழ்நாட்டு மாணவர்களும், மக்களும் ஒன்றுபட்டு நீட் தேர்வை எதிர்த்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு சட்டமன்றம் நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்கக் கோரும் சட்ட முன்வடிவை 01.02.2017 அன்று ஒரு மனதாக நிறைவேற்றி, குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பிவிட்டது. உச்ச நீதி மன்றத்தில், நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் சட்டப் போராட்டம் நடத்தி பலனின்றிப் போனதால் அரியலூர் மாணவி அனிதா உயிரீகம் செய்தார்.

இந்திய அரசு சார்பில், அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் அளித்த வாக்குறுதியும் பொய்யாகிப் போனது. “நீட் தேர்வு நடந்தே தீரும்.!” என்று கூறிய இந்திய அரசுகூட, இத்தேர்வு மாநிலப் பாடத் திட்டத்தையும் கணக்கில் கொண்டு நடத்தப்படும் என்று அறிவித்தது. இப்போது, அதுவும் பொய்யான வாக்குறுதி என்பது தெளிவாகி விட்டது.

மருத்துவப் படிப்புக்கு வரும் 2018 மே 6 அன்று நடைபெறும் நீட் தேர்வுக்கான வினாத்தாள், நடுவண் அரசின் சி. பி. எஸ். இ. பாடத்திட்டத்தின் அடிப் படையில் அமைந்திருக்கும் என அறிவிக்கப்பட்டு விட்டது.

ஒட்டுமொத்தமாகத் தமிழ்நாட்டின் உரிமை பறிக்கப்பட்டு, அப்பட்டமான இன ஒதுக்கல் “நீட்“ தேர்வின் மூலம் அரங்கேறுகிறது. பல்லாயிரக் கணக்கான பணம் கறக்கும் பயிற்சி மையங்களே முதன்மை பெற்று, மேனிலைக் கல்வியே பொருளற்ற தாக மாற்றப்படுகிறது.

எனவே, தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் நிறைவேற்றிய சட்டத்திற்கு குடியரசுத் தலைவர் உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டும் என்றும், குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற தமிழ்நாடு அரசு, விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று இச்சிறப்பு மாநாடு கோருகிறது! ●



# நெருங்கும் பேரழிவு சாகர்மாலா

இதுவரை நாம் பார்த்த அழிவுத் திட்டங்களான Methane, Shale, Nutrino, Hydrocarbon, Gail, Ongc என இதில் இருந்து கிடைக்கக்கூடிய இயற்கைக்குச் சொந்த மான வளங்களை பெருநிறுவன முதலைகள் அறு வடை செய்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப் போகும் திட்டத்திற்குப் பெயர்தான் சாகர்மாலா.

இந்திய வரலாற்றிலேயே மிகப்பிரம்மாண்டமாக 8,00,000 கோடி செலவில் 2003 ஆம் ஆண்டு துவங்கி வெளியில் தெரியாமல் மறைக்கப்பட்டு, செயல்படுத்தப் பட்டு வரும் திட்டம் இது.

இதற்கு இந்தியக் குடிமக்கள் ஒவ்வொருவரின் சட்டைப் பையில் இருந்து 6,400 ரூபாய், நம்மை கேட்காமலேயே எடுத்துள்ளார்கள்.

7,500 கி.மீ. நீளமுள்ள இந்தியக் கடற்கரையில் ஒரு ஊர் அளவு பிரம்மாண்டமான 20 துறைமுகங்கள், 200 துணை துறைமுகங்கள் கட்டமைக்க உள்ளார்கள்.

இந்தத் துறைமுகங்கள் அனைத்து 7கி.மீ. நீளமும் 600 மீட்டர் முதல் 200 மீட்டர் வரை அகலமான சாலைகள், ரயில் தண்டவாளங்கள், ஆற்று வழிகள், குழாய்கள் மற்றும் வானூர்தி மூலமாக இணைக்க மிகப்பிரம்மாண்ட கட்டமைப்பு ஏற்படுத்த உள் ளார்கள்.

இது சாதாரண சாலை அல்ல, இராணுவ பீரங்கி வாகனம் செல்லவும், இராணுவ விமானங்கள் இந்தச் சாலையில் தரை இறக்கும் அளவிற்கு மிக வலிமையாக கட்டமைக்கப்பட உள்ளார்கள். இராணுவ விமானங் களை இந்த சாலையில் தரை இறக்க நமது அன்பிற் குரிய தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

நமது வளங்களைக் கொள்ளையடிக்க வெள்ளை யன் தண்டவாளம் அமைத்தான். கொள்ளையடித்தது பற்றாது என்று, இந்த Goods ரயில் பாதைகள் தற்போதைய ரயில் பாதையைவிட பத்து மடங்கு அகல மாக வடிவமைக்க உள்ளார்கள். இது அனைத்திற்கும் பெயர் தான் Smart City.

ஆற்று வழித்தடங்களை துறைமுகங்களுடன் இணைக்க வேண்டும். இதற்குப் பெயர்தான் நதி நீர் இணைப்புத் திட்டம். இதை மோசடி ஆசாமியின் துணைகொண்டு செய்து வருகிறார்கள்.

இந்தத் துறைமுகங்களுக்கு மின் வசதி கொடுக்கத் தான் கூடன்குளம் அணுமின் நிலையம். இந்த சாகர்மாலா திட்டத்தை நிறைவேற்ற Roadway, Railway, Pipeline, Riverway, Airway, IT என பல தொழி நுட்ப நிறுவனங்கள் தேவைப்படுகிறது. இது தான் Make In India.

உலகிலேயே தரமான கருங்கற்கல் கிடைக்கும் ஒரே இடம் நம் தமிழகம். இதைச் சுரண்டி எடுத்து ஏற்றுமதி செய்யவே மலைகளைக் குடையும் Neutrino திட்டம்.

பூமிக்கடியில் உள்ள பெட்ரோலியப் பொருட்கள், இயற்கை எரிவாயு, கச்சா எண்ணெய், நிலக்கரி போன்ற இயற்கைக்குச் சொந்தமான வளங்களை எல்லாம் எடுக்கவே Hydrocarbon, Methane, Shale, ONGC திட்டம். இதை குழாய் மூலம் துறைமுகங்களுடன் இணைக்கவே Gail pipeline திட்டம்.

இதை எல்லாம் நிறைவேற்ற இப்பகுதியில் உள்ள வேளாண் மக்களை வேளாண்மையில் இருந்து விரட்டியடிக்கவே, நீண்ட காலமாக நீளும் காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்சினை. காவிரியில் நீர் வராததிற்கும் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காததிற்கும் இதுவே காரணம்.

பிரம்மாண்ட துறைமுகங்கள் அமைக்க 3,600 கடற்கரை மீனவக் கிராமங்களை அப்புறப்படுத்தி, 25 கோடி மீனவ மக்களை அவர்களது மீன்பிடித் தொழிலில் இருந்து விரட்டியடிக்க உள்ளார்கள்.

இதற்கு இவர்கள் வடிவமைத்த நாடகங்களோ ஏராளம் ஏராளம். எண்ணூர் எண்ணெய்க் கசிவு, கடற்கரை ஓர மீனவக் கிராமங்களில் காவல்துறை அத்துமீறல், தமிழர்கள் மீது கச்சத்தீவு எல்லையில் இலங்கை இராணுவத் துப்பாக்கிச் சூடு, ஓகி புயல் அறிவிப்பின்மை, மீன்பிடிக்க சீன வலை, என நாடகங்கள் நீலக்கடலை விட நீள்கிறது.

25 கோடி மக்கள் வயிற்றில் அடித்து இவர்களை இந்தத் தொழிலில் இருந்து அப்புறப்படுத்த ஒரு கோடிப் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்க உள்ளார்கள் ஒரு ஊரளவு பிரம்மாண்ட துறைமுகங்களில் துப்புரவுத் தொழிலாளியாகக் கூட்டிப் பெருக்க, கழிவறை சுத்தம் செய்வது போன்ற அடிமைக் கூலி வேலைகளில் நம் மக்களை பணி அமர்த்த உள்ளார்கள்.

மேலும் 4120 சதுரக் கிலோ மீட்டர் மேங்ரூவ் காடுகள் அளிக்கப்பட்ட உள்ளது. “செத்தும் கொடுத்தான் சீதக்காதி“ என்பார்கள். அதுபோல இறந்து கடலடியில் புதையுண்ட பவளப்பாறைகள் வசிப்பிடமாய் மாறிப்போன நமது முன்னோர்களின் வாழ்விடங்களில் அமைந்திருக்கும் மீன்கள் உற்பத்தி யாகக்கூடிய இடமான பவளப்பாறைகள் முழுவதும் துறைமுக கட்டமைப்பின் போது அழித்தொழிக் கப்படும்.

உலகிலேயே அதிக பவளப்பாறைகள் கொண்டது நமது கடற்கரை என்பது குறிப்பிடத்தக்கது. கடல் ஓரங்களில் உள்ள 1208 தீவுகளை தனியார் Corporate நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப் போகிறார்கள். இதற்கும் தனுஷ்கோடி, மக்கள் வாழ தகுதியற்ற இடம் என்ற இந்திய அரசு அறிவிப்பிற்கும் தொடர்பு இல்லை என சொன்னால் முட்டாள் கூட நம்ப மாட்டான்.

உலகில் எங்கும் நடக்காத கூத்தாக சில துறை முகங்களை தனியாருக்கு ஒப்படைக்க உள்ளார்கள். இந்தத் துறைமுகங்கள், தீவுகள் அனைத்தும் இராணுவ மயமாக்கப்பட உள்ளது.

இப்படி, தான் நினைத்த அனைத்தையும் Corporate கைக்கூலிகளான கூமுட்டை அரசியல் வாதிகளை வைத்து திட்டமிட்டபடி வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறது உலக வல்லாதிக்கம். இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் 2035ல் தமிழகம் வாழத் தகுதி யற்ற பாலைவனப் பூமியாக மாறிப்போகும் என்கிறது ஒரு ஆய்வு.

சரி, இந்தப் பேரழிவு வராமல் தடுக்க, நாம் செய்ய வேண்டிய முதற்கட்டப் பணி என்ன?

நாம் செய்ய வேண்டியது எல்லாம் ஒன்றே ஒன்று தான் இந்த சாகர்மாலா திட்டத்தின் அபாயத்தை Phd Scholar முதல் பாமரன் வரை பட்டிதொட்டி எங்கும் கொண்டு சேர்க்க வேண்டும்.

மக்கள் மட்டும் விழிப்படைந்துவிட்டால் எந்தச் சக்தியாலும் ஒன்றும் செய்ய முடியாது. தமிழகத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் அழிவுத்திட்டங்களின் அபாயத்தை எளிமையாகக் கொண்டு சேர்க்க எனது யோசனை!

எந்த வசதியும் இல்லாத காலத்தில் பாமரனுக்கு இராமாயணம், மகாபாரதம் எல்லாம் எப்படி சென்றடைந்தது? தெருக்கூத்து மூலம். அது போல்தான் இதுவும்.

சாகர்மாலா போன்ற அழிவுத் திட்டங்களை அழிக்கும் திட்டத்தின் பெயர் தெருவிழித் திரை Street Aware Screen !

தெருவிற்கு ஒரு விழிபடைத்த இளைஞன் நிச்சயம் இருப்பான், நாம், நம் தெருவில் உள்ள மக்கள் அனைவரும் இணைந்து Projector, Screen, Speaker & Mike இதை சொந்தமாகவோ வாடகைக்கோ வாங்க வேண்டும்.

சாகர்மாலா போன்ற பேரழிவுத் திட்டத்தின் அபாயத்தைக் குறித்த விளக்கும் பல காணொளிகள் உள்ளன. அவற்றை மாலை நேரங்களில் மக்களுக்கு போட்டுக்காட்ட வேண்டும். விழிப்புணர்வை ஏற்படுத்தும், இன்னும் பல குறும்படங்களை உரு வாக்கி போட்டுக்காட்ட வேண்டும். இந்தத் தெரு விழித்திரை நிகழ்ச்சி தமிழகம் முழுக்க உள்ள அனைத்துத் தெருக்களிலும் நடைபெற வேண்டும்.

இதைப் பார்க்கப் பார்க்க மக்கள் இதைப் பற்றி சிந்திக்கத் துவங்குவார்கள், பேசத் துவங்குவார்கள், நாளை எதிர்க்க வேண்டிய நிலை வந்தால் மக்கள் அனைவரும் ஒருமித்த குரல் கொடுக்க இது நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தரும்.

இது தெருவில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திரை என்பதால் ‘தெரு விழித்திரை’ என பெயர்.

கல்தோன்றி மண் தோன்றா காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்த குடி எங்கள் தமிழ்க்குடி, இம்மண்ணில் வாழும் வரை எந்த கொம்பனாலும் இந்த மண்ணை ஒன்றும் செய்ய முடியாது.

Alex Collier என்னும் ஆராய்ச்சியாளர் உலகில் முதல் முதலாக பேசப்பட்ட மொழி ‘தமிழ்’ என்கிறார்.

UNESCO சொல்கிறது “TAMILIANS ARE REFERRED TO BE THE LAST SURVIVING CLASSICAL CIVILIZATION IN THE WORLD”

இவ்வுலகில் கடைசியாக வாழும் தொல் இனம் ‘தமிழினம்’ என்கிறார்கள்.

நம்முடன் வாழ்ந்த சமகால தொல் இனங்கள் அனைத்தும் அழிந்து விட்டது. நாம் மட்டும் இவ்வுலகில் நிலைத்திருக்கக் காரணம் ஒன்றுதான். அது நம்முடைய போர்க்குணம்.

இந்த நாசகார சாகர்மாலாத் திட்டத்தை மட்டும் நாம் தடுக்காமல் விட்டால், தமிழகம் அடுத்த சோமாலியாவாக மாறுவதை யாராலும் தடுக்க முடியாது.

முன் நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் இணைத்துப் பார்த்தால், அது அத்தனையும் இத்திட்டத்திற்காகத்தான் என்பது உங்களுக்குத் தெரிய வரும். இத்திட்டம் வராமல் தடுப்பது, இம்மண்ணில் விளைந்த அரிசிப் பருக்கையை உண்ணும் ஒவ்வொருவரது கடமை. இக்கடமையை நாம் செய்யத் தவறினால், தன் சொந்த மண்ணையும், இனத்தையும் காக்காத பெரும் பாவத்திற்குள்ளாகி ஈனப்பிறவிகள் என வரலாற்றில் இடம் பிடிக்கும் அவல நிலை ஏற்பட வாய்ப்புள்ளது.

உடனே இந்த நாசகார சாகர்மாலா என்னும் அழிவுத்திட்டம் ஏற்படுத்தப்போகும் பேராபத்தை மக்களுக்கு உணர்த்த ‘தெரு விழித்திரை / Street Aware Screen’ என்னும் திட்டத்தை நாம் செயல்படுத்துவோம்.

●



**காற்றின் கைகளில்**

என்னைத் தீண்டும்
காற்றின் கைகளில்
அவனது ரேகையின் படிவங்கள்...

**தனித்துவத்தை தொலைத்து**

செயற்கை காற்றாடிகளாக
நம்மை இயக்கும்
இதயமற்றவர்கள்
தனித்துவத்தை தொலைத்து
சுற்றித் திரிகிறோம்...

**அவள் தேய்வதால்...**

உன் தாயை என்னுடன் ஒப்பிடாதே
என்னுள் களங்கமுண்டு – அவளோ
உலகில் சிறந்தவள்
நான் தேய்ந்து வளர்கிறேன்
அவள் தேய்வதால் நீ வளர்கிறாய்
நீ அவளை மட்டும் விட்டுச் செல்கிறாய்
உன் எதிர்காலத்தையும்
இழந்து செல்கிறாய்
காப்பகங்களின் கைகளில்...

**முதுமைக் குழந்தைகள்**

கட்டணக் கருவறையாக
என்னைச் சுமக்கிறது
காப்பக அறை – என்னைப் போல்
பல முதுமைக் குழந்தைகள்
தாயின்றி தனிமையில்

*கவிஞர். உ. அ. சிந்து.*

# பாகிஸ்தானில் நாடாளுமன்ற மேல்சபை உறுப்பினராக இந்துப்பெண் தேர்வு



பாகிஸ்தான் நாடாளுமன்ற மேல்சபைக்கு தேர்தல் நடந்தது. இந்த தேர்தலில் ஆளும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி (நவாஸ்) 15 இடங்களில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் மேல்சபையில் 33 இடங்களுடன் அந்தக் கட்சி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்து உள்ளது.

சிந்து மாகாணத்தில் 12 இடங்களில் 10 இடங்களை முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் மகன் பிலாவல் பூட்டோ சர்தாரி தலைமையிலான பாகிஸ் தான் மக்கள் கட்சி பெற்று இருப்பது குறிப்பிடத் தக்கது.

**இந்துப்பெண்**

சிந்து மாகாணத்தில் இருந்து மேல்சபைக்கு போட்டியிட்ட இந்து தலித் இனப்பெண் கிருஷ்ண குமாரி கோலி (வயது 39) வெற்றி பெற்றார். இதன்மூலம் பாகிஸ்தான் வரலாற்றில் நாடாளுமன்ற மேல்சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ள முதல் தலித் இன இந்துப்பெண் என்ற பெயரை அவர் பெற்று இருக்கிறார்.

இவர் அங்கு எதிர்க்கட்சியாக உள்ள பாகிஸ்தான் மக்கள் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருடைய வெற்றி, பெண்களுக்கு மிகப்பெரிய மைல் கல்லாகவும், சிறுபான்மையினர் உரிமைக்கு கிடைத்த வெற்றியாகவும் பார்க்கப்படுகிறது.

இதற்கு முன்பும் இதே கட்சி சார்பில்தான் ரத்னா பகவன் தாஸ் சாவ்லா என்ற பெண், நாடாளுமன்ற மேல்சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்துப் பெண் என்ற பெயரைப் பெற்று இருந்தார்.

கிருண்குமாரி கோலி, தார்பகுதியில் நங்கர்பார்க்கர் மாவட்டத்தில் உள்ள சின்னஞ்சிறு கிராமத்தைச் சேர்ந்தவர் ஆவார். ஒரு ஏழை விவசாயக் குடும்பத்தின் மகளாக 1979ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் பிறந்தவர் ஆவார்.

இவரும், இவரது குடும்ப உறுப்பினர்களும், 3 ஆண்டுகள் உமர்கோட் மாவட்டத்தில் குன்ரி என்ற இடத்தில் ஏராளமான நிலங்களின் அதிபராக இருந்த ஒருவரின் தனியார் சிறையில் இருக்க நேர்ந்து உள்ளது. இவர் அப்போது 3வது கிரேடு மாணவியாக இருந்து உள்ளார்.

தனது 16வது வயதில் 9ஆம் கிரேடில் படித்துக் கொண்டிருந்தபோது லால்சந்த் என்பவரை திருமணம் செய்து கொண்டார். ஆனாலும் தனது படிப்பைத் தொடர்ந்தார். சிந்து பல்கலைக்கழகத்தில் பெற்றார்.

தனது சகோதரருடன் இவர் பாகிஸ்தான் மக்கள் கட்சியில் ஒரு சமூக ஆர்வலராக இணைந்தார். தார் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்காகவும், அவர்களது உரிமைகளுக்காகவும் பாடுபட்டு பெயர் பெற்றார்.

இப்போது நாடாளுமன்ற மேல்சபை உறுப்பினராக உயர்ந்து உள்ளார். இவரது வெற்றியை அங்கு உள்ள சிறுபான்மை மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

# தும்மல் குணமாகிட...?



தும்மல் என்றால் என்ன? அது எப்பொழுது வருகிறது? யாருக்குமே எப்பொழுதும் தும்மல் வராது. ஒரு குறிபிட்ட நேரத்தில் மட்டுமே தும்மல் வரும். நன்றாக யோசித்துப் பாருங்கள். ஒரு பழைய துணியை எடுத்து உதறினால், அதில் இருக்கும் தூசுகள் மூக்கின் வழியாக உள்ளே செல்லும். அதன் காரணமாக தும்மல் வரும். அல்லது காலையில் நடக்கும்போது யாராவது தெருவைப் பெருக்கிக் கொண்டிருந்தால் அதனால் எழும்பும் தூசியால் தும்மல் வரும்.

சூடாகச் சாப்பிடும்பொழுது தும்மல் வரும். காரமாகச் சாப்பிடும் பொழுதும் தும்மல் வரும். அடுப்பில் மிளகாய் போன்ற காரணமான பொருட்களை வறுக்கும் பொழுதோ, வேக வைக்கும் பொழுதோ காரம் மூக்கின் வழியாக நுழைந்து தும்மல் வரும்.

தும்மல் என்பது மூக்கின் வழியாக நுரையீரலுக்குள் உடலுக்குக் கெடுதல் விளைவிக்கும் தூசுகள், வெப்பம், காரம், கிருமிகள் நுழையும்பொழுது நம் நுரையீரல் பயப்படும். உடனே நுரையீரல் நம் உடலில் உள்ள ஒரு மருத்துவரிடம் சென்று, எனக்குள்ளே நாற்பது தூசுகள் வந்து விட்டன. இதனால் எனக்கு ஆபத்து வந்துவிட்டது. எனவே, அதை வெளியேற்ற வேண்டும் என்று கேட்கும். நமது உடலில் உள்ள மருத்துவர் உடனே தும்மல் சுரப்பி என்ற ஹிட்மென் என்ற சுரப்பியிடம் அந்த வேலையைக் கொடுப்பார். தும்மல் சுரப்பி நுரையீரலுக்குச் சென்று ஆராய்ச்சி செய்வார். இங்கே நாற்பது தூசுகள் உள்ளன. எனவே ஒரு நாலு தும்மல் மூலமாக அந்த தூசுகளை வெளியேற்றலாம் என்று முடிவு செய்து தும்மலுக்குத் தேவையான சக்தியை உடலிலிருந்து பெற்று, தேவையான அளவு காற்றை எடுத்து தும்மல் வரும்பொழுது அதில் நீர்த்துளிகள் வரும். எனவே உடலில் உள்ள தும்மலுக்கு தேவையான நீரை உறிஞ்சி நமக்குத் தெரியாமல் நம்மையும் மீறி நான்கு முறை காற்றுடன் தண்ணீரைக் கொண்டு அந்த நாற்பது தூசிகளையும் வேகமாக நுரையீரலிலிருந்து வெளியேற்றும் ஒரு அற்புதமான கழிவு நீக்கம் என்ற வேலைதான் தும்மல்.

தும்மல் என்பது நமது கட்டுப்பாட்டில் கிடையாது. நம்மை மீறி திடீரென வருகிறது. எனவே தும்மல் என்பது ஒரு நோய் கிடையாது. தும்மல் நம் உடல் பார்க்கும் வைத்தியம். ஆனால் நாம் தும்மல் வரும்பொழுது அதை அடக்க நினைக்கிறோம். சிலர் அலுவலகத்திலோ கூட்டங்களிலோ இருக்கும் பொழுது தும்மல் வராமல் அடக்குகிறோம். இப்படி தும்மல் வரும்பொழுது அடக்கினால் அதற்குப் பெயர்தான் நோய். சிலர் தும்மல் வரும்பொழுது அதை நிறுத்துவதற்கு தைலம் போன்ற பொருட்களைப் பயன்படுத்துகின்றார்கள். தும்மல் வரும்பொழுது தைலம் பயன்படுத்தினால் என்ன நடக்கும்? தைலத்தின் வாசம் உடலுக்குள் புகுந்து தும்மல் சுரப்பியை வேலை செய்யாமல் இருக்குமாறு கட்டளையிடும். நமது

உடலிலுள்ள கழிவை வெளியே வீசும் மருத்துவம் செய்யும் தும்மல் சுரப்பியை வேலை செய்ய வேண்டாம் என்று தடுப்பது நமது உடலுக்கு நாம் செய்யும் துரோகமாகும்.

இப்படி தைலத்தின் வாசம் இருக்கும்வரை நமக்கு தும்மல் வராது. நாம் நினைத்துக் கொள்கிறோம் தும்மலை குணப்படுத்தி விட்டோம் என்று, கண்டிப் பாகக் கிடையாது. நீங்கள் கழிவை வெளியேற்றும் ஒரு செயலை நிறுத்தி விட்டீர்கள். சுமார் ஒரு நான்கு அல்லது ஐந்து மணி நேரத்திற்கு அந்த தைலத்தின் வாசம் இருக்கும்வரை தும்மல் சுரப்பி சுரக்காது. ஏற்கெனவே நாற்பது தூசுகள் உள்ளே சென்ற நிலையில் தும்மல் சுரப்பி சுரக்காவிட்டால் இந்த ஐந்து மணி நேரத்தில் நாலாயிரம் தூசுகள் நம் நுரையீ லுக்குள் புகுந்து விடும். எனவே தும்மல் வரும்பொழுது அதை நிறுத்துவதற்கு எந்த வைத்தியமும் செய்யக் கூடாது. நாம் இருக்கும் இடத்தில் உள்ள காற்று கெட்டு விட்டது என்று புரிந்து நாம் அந்த இடத்தை விட்டு வெளியே வர வேண்டும். அல்லது முகத்தில் துணியை கட்டிக் கொள்ள வேண்டும்.

இப்படி காற்றை சுத்தம் செய்வதைப் பற்றித்தான் யோசிக்க வேண்டுமே தவிர, தும்மலை நிறுத்துவதற்கு முயற்சி செய்யக்கூடாது. எனவே, தும்மல் என்பது ஒரு நோயே கிடையாது. தும்மல் வந்தால் நன்றாக தும்ம வேண்டும் என்பது மட்டுமே மருத்துவம் ஆகும். தும்மலுக்கு ஒரே சிகிச்சை தும்முதல் மட்டும்தான். இதைத் தவிர எதைச் செய்தாலும் அது உடலுக்குக் கெடுதல் உண்டு பண்ணும். ●

---

# இயற்கையை வாழவிடு

விந்தையான இந்த உலகில் வாழுகின்ற மானிடா
இயற்கை என்னும் புதையலை இழந்ததும் ஏனடா?

மண்ணில் இருந்து விண்ணுலகில் இடம் பிடிக்கும் மானிடா
வாழ்வளித்த மண்ணை நீயும் மறப்பதும் ஏனடா?

தன்னைத்தானே சுற்றுவது பூமிதானடா
உன்னை நீயே சுற்றிப்பார்க்க இயலவில்லை ஏனடா?

இயற்கையின் உதவியுடன் வாழுகின்ற மானிடா
நீ வாழ உதவுகின்ற இயற்கையை அழிப்பதும் ஏனடா?



மரங்களெல்லாம் மழை வரவழைக்கும் அற்புதம் தானடா
அந்த அற்புதத்தை வெட்டி வீழ்த்துவதும் ஏனடா?

மனிதன் முதன் முதலில் பிறந்தது காட்டில்தானடா
நீ பிறந்த காட்டை அழித்து காசு பார்ப்பதும் ஏனடா?

நீ உண்ணும் உணவைத் தந்தது நம் பூமிதானடா
பூமியை விற்று மாடி கட்டினால் உணவுக்கு எங்கே போவாயடா?

குடிக்கும் நீரை புட்டியில் அடைத்து விற்கும் மானிடா
விரைவில் காற்றை வாங்கும் நிலையும் வந்திடும் பாரடா

கண்ணில் பட்டதையெல்லாம் விற்று பணம் பார்க்கும் மானிடா
வருங்கால தலைமுறைக்கு துரோகம் செய்வது ஏனடா?

இயற்கையை வாழவிடு வரும் தலைமுறைக்கு நல்ல வாழ்வு
கொடு.

V.M.A. தியாகராஜன்.
சென்னை, 600 106.
9962082032.

# தமிழ்நாட்டில் மற்றுமொரு போர்முனையில்

# இந்துத்துவ சக்திகள்



தமிழ்நாட்டில் மற்றுமொரு போர்முனை யைத் இந்துத்துவ சக்திகள் தொடங்கியிருக் கின்றன என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும்.

கோயில்களை மீட்கும் இயக்கம் என்ற பெயரில் எச். ராஜா, சுப்ரமணியசாமி உள்ளிட் டவர்கள் துணிச்சலாக தமிழ்நாட்டிலுள்ள கோயில்களையும் அதன் சொத்துகளையும் தங்கள் கைகளில் கொண்டு வருவதற்காக முழுமூச்சோடு களம் இறங்கியிருக் கிறார்கள். இது அவர் களுடைய நீண்ட காலத் திட்டம். நடந்து கொண் டிருப்பது எட்டப்பர்களைவிட மிகமோசமான துரோகிகளின் ஆட்சி.

இந்து சமய அறநிலையத்துறையின் மீது தொடர்ச்சியாக பழிகளைப் போட்டு, கோயிலி லிருந்து அரசை வெளியேற்ற வேண்டும் என்கிற உத்தியை நீண்டகாலமாக கைக்கொண்டு இந்த நிலைக்கு அவர்கள் உயர்ந்திருக்கிறார்கள். மதுரைத் தீயி லிருந்து அதைத் தொடங்கியிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் எல்லாத்துறைகளிலும் காணப் படுவது போலவே இந்து சமய அறநிலையத் துறையிலும் பல்வேறு ஊழல்களும் நிர்வாகக் கோளாறுகளும் மலிந்து காணப் படுகின்றன. அதன் சட்ட திட்டங்களிலும் நடைமுறை களிலும் முன்னேற்றம் தேவைப்படுகிறது என்பது உண் மையே.

ஆனால், நீதிக்கட்சி அரசின் காலத்திலிருந்து தமிழ் நாட்டிலுள்ள கோயில்களுக்கான பொறுப் பில் இருந்து வரும் இந்த நடைமுறை நெடுங் காலமாக தமிழ்நாட்டில் உள்ள கோயில் நிர்வாக முறையின் தொடர்ச்சியே ஆகும். கோயில்கள் முன்பு மன்னர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. இப்போது மக்களாட்சியின் கண்காணிப்பில் இருக்கின்றன. கோயில்கள், முன்பு ஆதிக்கச் சாதியினரின் கட்டுப்பாட்டில் இருந்தன. இன்று அனைத்துச் சாதியினருக்கும் பொதுவான அரசின் கண்காணிப்பில் இருக்கின்றன.

கோயில்களின் நிர்வாக வரலாறையும் அதன் சமூக வரலாற்றுப் பாத்திரத்தையும் அறியாதவர் கள்தான் கோயில் களிலிருந்து அரசு வெளியேற வேண்டும் என்று முட்டாள் தனமாகக் கூறுவார் கள். கிறிஸ்தவ சர்ச்சுகளும் முகம்மதிய வழிபாட் டிடங்களும் எவ்வாறு இருந்தனவோ அப்படியே இருந்தவை அல்ல நமது தமிழகக் கோயில்கள். இது பற்றி நாம் நிறைய பேசுவோம். இப்போதைக்கு நாம் கவனிக்க வேண்டி யது இந்த எச். ராஜா, சாமி உள்ளிட்டோரின் திட்டத்தைத்தான்.

ஒட்டுமொத்த கோயில்களையும் அதன் சொத்து களையும் தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளத் துடிக்கும் பார்ப்பன சக்திகள், இப்போது இந்து சமய அறநிலையத்துறை மீதும் தமிழ்நாட்டு அரசின் மீதும் கடுமையான யுத்தத்தைத் தொடங்கியுள்ளன. தொடக்கத்தைத்தான் நீங்கள் பார்த்திருக் கீறீர்கள், இனி முழுமையும் பார்ப்பீர்கள்.

நமது முட்டாள் மகாராசாக்கள் செய்த பெரிய தவறுகளுக்கான தண்டனையை நாம் அனுபவிக்கி

றோம். கோயில்களும் அவற்றின் சொத்துக்களும் நம் முடையவை. அங்கே மந்திரம் சொல்லவும் மணியடிக் கவுமே பார்ப்ப னர்கள் வேலைக்கு அமர்த்தப் பட்டார்கள். பிறகு அந்த நிலையை மாற்றி அனைத்துச் சாதியினருமே அப்பணியைச் செய்ய நாம் முயற்சி செய்கிறோம். புரோகித சக்திகள் அதை எதிர்த்து வருகின்றன. பெருந்தன்மையின் காரணமாகவும் அடிமைத்தனத்தின் காரணமாகவே தமிழ்நாட்டின் கோயில் களில் புரோகிதர்களின் அழிச் சாட்டியங்கள் மக்களால் தீவிரமாக விமர்சிக்கப்படுவதில்லை.

இப்போது இந்துக்களிடம் கோயிலை ஒப்படை யுங்கள் என்று கிளம்பியுள்ள இந்தக் கூட்டத்தின் உள்நோக்கத்தை நாம் அறிந்து கொண்டு செயல்பட வேண்டும். குறிப்பாக, இந்த சமய அறநிலையத்துறை தொடர்பாக வெளிவருகிற செய்திகள் குறித்து நாம் கவனமாக இருக்க வேண்டும்.

அந்தத்துறையில் பிரச்சினைகளே இல்லை, ஊழல்களே இல்லை என்று கூற முடியாது. அவற்றை இனம் கண்டு நாம் சரிசெய்ய வேண்டும். அதைச் செய் வோம். எப்படி கல்வித்துறையில் நடைபெறும் கோளாறுகளைக் காரணம் காட்டி, கல்வித்துறையை மாநிலத்திடமிருந்து பறிக்க திட்டமிடுகிறார்களோ, அதைப் போலவே இந்து அறநிலையத்துறையில் உள்ள சிக்கல்களைப் பூதாகரமாகக் காட்டி, கோயில் களை நம்மிடமிருந்து திருடப் பார்க்கிறது காவிக் கூட்டம்.

இதைப் பற்றி எல்லாம் புரிந்து கொள்ளாமல் சில 'மட'த் தலைவர்களும் பத்திரிகையாளர்களும் இந்து அறநிலையத்துறையை விளாசித் தள்ளுகிறார்கள். இந்துக்களிடம் கோயிலை ஒப்படை என்கிறார்கள். இவ்வளவு நாட்களாக வேறு யாரிடம் கோயில் இருக்கிறது? இந்து அறநிலையத்துறையும் உள்ளூர் சமூகமும் சேர்ந்துதான் கோயிலை நிர்வகிக்கின்றன. அதில் இருப்பவர்கள் நூற்றுக்கு நூறும் இந்துக்கள் தான். மொத்த கோயில்களையும் சொத்துகளையும் வருமானத்தையும் தமது கையில் எடுத்துக் கொள்ள விரும்புகிற பார்ப்பனக்கூட்டம் இந்து என்று சுட்டுவது யாரை?

காவிக்கூட்டம் தமிழ்நாட்டை அழிவுப்பாதைக்குக் கொண்டு செல்கிறது. ஆட்டத்தைத் தொடங்கிய வர்கள் அதன் ஆழம் தெரிந்துதான் தொடங்கியிருக் கிறார்களா என்று தெரியவில்லை.

தமிழ்நாட்டுக் கோயில்கள் வெறும் வழிபாட்டு இடங்கள் அல்ல. அவை தமிழ்நாட்டு பொருளா தாரத்தின், அரசியல் அதிகாரத்தின் மையங்களாக இருந்தவை. அவை இன்று தமிழகத்தின் அனைத்து மக்களுக்கும் சொந்தமானவை. அந்தக் கோயில்களை பேணிக்காத்த சமூகங்களுக்கு மட்டுமல்ல, அந்தக் கோயில்களால் புறக்கணிக்கப்பட்ட சமூகங்களுக்கும் அவை சேர்த்தே சொந்தமானவை. இருபதாம் நூற் றாண்டில் நாம் கோயில்களையும் சமய உரிமை களையும் இந்துக்கள் என்று அழைக்கப்படும் அனை வருக்கும் பொதுவான ஒன்றாக ஆக்கியிருக்கிறோம். இது மிகப்பெரிய சாதனையாகும்.

அவை சமூகத்தின் பொதுச் சொத்து. எனவே, அரசின் கண்காணிப்புக்குள்தான் அவை இருக்க முடியும். இந்த நிலையை மாற்ற பார்ப்பனர்களும் அவர்களது அடிவருடிகளும் ஏதேனும் செய்ய முயன்றால் பழனிச்சாமிகளும் பன்னீர்செல்வங்களும் சும்மா பார்த்துக் கொண்டு நின்றால், தேன் கூட்டில் கைவைத்து விட்டு பிறகு குய்யோ முறையோ என்று கத்தி பிரயோசனம் இருக்காது. தமிழகத்தின் அனைத்து மக்களும் எழுந்து நின்று இந்த பார்ப்பனிய ஆக்கிர மிப்பை முறியடிக்க வேண்டும்.

முதலில் சிதம்பரத்தை மீட்க வேண்டும். தமிழகத்தின் கோயில்களிலிருந்து பார்ப்பனீயத்தின் சுவடுகள் நிரந்தரமாக அழித்தொழிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்களா என்று தெரிய வில்லை. விரும்பினால் அதைச் செய்து முடிக்கும் நிலையில்தான் இன்றைய தமிழ் இளைய சமூகம் இருக்கிறது.

நெருப்பு புகைந்து கொண்டிருக்கிறது. சாம்பலைப் பார்த்துவிட்டு, எல்லாம் அவிந்து போய்விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறது காவிக்கூட்டம். மறு படியும் ஊடக நண்பர்களுக்கும் பிறருக்கும் வேண்டு கோள் கோயில்கள், இந்து அறநிலையத் துறை தொடர்பான செய்திகளை எச்சரிக்கையோடு அணு குங்கள். மிகப்பெ ரிய உளவியல் போர் தொடங்கப் பட்டிருக்கிறது. ஏமாந்து போகாதீர்கள்.

பகுத்தறிவாளர்கள் கவனத்துக்கு, இது மதத்துக்குள் நடக்கிற பிரச்சினை அல்ல. கோயில்கள் எக்கேடு கெட்டுப் போனால் என்ன என்று நினைத்து விடாதீர்கள்.

உண்மையில் தமிழர்கள்தான் கோயில்களை மீட்கும் போராட்டத்தை நடத்தி, அவற்றை உண்மை யில் அனைத்துச் சமூகத்தவர்களுக்கான பொது இடமாக மாற்ற வேண்டும். கோயில்களில் தமிழும் தமிழ்ச்சமய நெறிகளும் கோலோச்சும்படி செய்ய வேண்டும்.

மீண்டும் அனைத்து சனநாயக, முற்போக்கு சக்திகளும் இணைந்து நிற்கவேண்டிய மற்றுமொரு போர்க்களத்தை பார்ப்பனீய சக்திகள் தொடங் கியுள்ளன. நமது ஊடகத்துறை நண்பர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு செய்தியிலும் சொல்லி லும் கவனமாக இருக்க வேண்டும்.

**• ஆழி செந்தில்நாதன்**



# உன் வாழ்க்கையை நீ வாழ்!
# வாரியார் சுவாமிகள்

எறும்பு, பட்டாம்பூச்சியின் வாழ்க்கையை வாழ ஆசைப்படவில்லை.
நாய், சிங்கத்தைப் பார்த்து ஒரு நாளும் துளி கூட பொறாமைப் படவில்லை.
யானை, ஆகாயத்தில் பறக்கும் கிளியைக் கண்டு ஏக்கப் பெருமூச்சு விடவில்லை.
காகம், குயிலின் இசையைக் கேட்டு தானும் அது போல் பாட ஏங்கவில்லை.
அதனதன் வாழ்க்கையை அதது வாழ்கின்றது.
நீ மட்டும் ஏன் பொறாமைப்படுகிறாய்?
நீ ஏன் அடுத்தவரைப் பார்க்கிறாய்?
நீ மட்டும் ஏன் புலம்புகிறாய்?
நீ ஏன் வருந்துகிறாய்?
நீ ஏன் ஏக்கப்பெருமூச்சு விடுகிறாய்?
நீ அடுத்தவருடைய தூக்கத்தை தூங்க முடியாது.
நீ அடுத்தவருடைய பசிக்கு சாப்பிட முடியாது.
நீ அடுத்தவருடைய வாழ்க்கையை வாழ முடியாது.
ஆகாயம் போல் பூமி இல்லை.
பூமி போல் காற்று இல்லை.
காற்று போல் தீ இல்லை.
தீயைப் போல் தண்ணீர் இல்லை.
ஆலமரம் போல் பப்பாளி மரம் இல்லை.
பல்லி போல் புலி இல்லை.
தங்கம் போல் தகரம் இல்லை.
பலாப்பழம் போல் வாழைப் பழம் இல்லை.
கத்தரிக்காய் போல் வெண்டைக்காய் இல்லை.
துணி போல் கருங்கல் இல்லை.
சிற்பம் போல் சாதாரண கருங்கல் இல்லை.
நாற்காலி போல் கட்டில் இல்லை.
ஒரு மரத்தின் பழங்களிலேயே ஒன்று போல் மற்றொன்று இல்லை.
ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளிலேயே ஒருவர் போல் மற்றொருவர் இல்லை.
ஆண் உடல் போல் பெண்ணுடல் இல்லை.
நேற்று போல் இன்று இல்லை.
இன்று போல் நாளை இல்லை.
போன நிமிடம் போல் இந்த நிமிடம் இல்லை.
இந்த நிமிடம் போல் அடுத்த நிமிடம் இல்லை.
ஒன்று போல் மற்றொன்று இல்லை.
இத்தனை ஏன்?
உன் தலைவலி போல் பல்வலி இல்லை.
உன்னுடைய கண் போல் காது இல்லை.
இனியாவது சரியாக சிந்தனை செய். அதனால் நீ தனி தான்.
உன் கைரேகை தனி தான்.
உன் பசி தனி தான்.
உன் தேவை தனி தான்.
உன் பலம் தனி தான்.
உன் பலவீனம் தனிதான்.
உன் பிரச்சனை தனி தான்.
உனக்குரிய தீர்வும் தனி தான்.
உன் சிந்தனை தனி தான்.
உன் மனது தனி தான்.
உன் எதிர்பார்ப்பு தனி தான்.
உன் அனுபவம் தனி தான்.
உன் பயம் தனி தான்.
உன் நம்பிக்கை தனி தான்.
உன் தூக்கம் தனி தான்.
உன் மூச்சுக்காற்று தனி தான்.
உன் வலி தனி தான்.
உன் தேடல் தனி தான்.
உன் கேள்வி தனி தான்.
உன் பதில் தனி தான்.
உன் வாழ்க்கைப் பாடம் தனிதான்.
உன் வாழ்க்கை தனி தான்.
உன் வாழ்க்கை அதிசயமானது தான்.
உன் வாழ்க்கை ஆச்சரியமானது தான்.
உன் வாழ்க்கை அபூர்வமானது தான்.
உன் வாழ்க்கை அர்த்தமுள்ளது தான்.
உன் வாழ்க்கை உத்தமமானது தான்.
அதனால் இன்றிலிருந்து இப்பொழுதிலிருந்து உன் வாழ்க்கையை மட்டும் நீ வாழ்ந்து பார்.
வாழ்வின் ரசனை தெரியும்.
வாழ்வின் அர்த்தமும் புரியும்.
இனியும் உன் வாழ்க்கையைக் கேவலப் படுத்தாதே.
உன் வாழ்க்கையை அசிங்கப்படுத்தாதே.
உன் வாழ்க்கையை உதாசீனப்படுத்தாதே.
உன் வாழ்க்கையை வெறுக்காதே.

பெரியார் பிள்ளையாரைப் போட்டுடைத்தார் என்று குற்றம் சாட்டப்பட்டு, கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்...நீதிபதி, கைது செய்த காவலரிடம்...

இவர் என்ன குற்றம் செய்தார்?

காவலர்: இவர் பிள்ளையாரைப் போட்டுடைத் தார்.

நீதிபதி: பெரியாரிடம் பிள்ளையாரைப் போட்டு டைத்தீர்களா?

பெரியார்: ஆமாம், போட்டுடைத்தேன்

நீதிபதி: ஏன் அப்படி செய்தீர்கள்?

பெரியார்: கடைவீதிக்குப்போனேன், அங்கு பிள்ளையார் சிலையை விலைக்கு வாங்கினேன்.. யாருக்கும் இடையூறு இல்லாமல் தெரு ஓரமாகப் போட்டுடைத்தேன்..

நீதிபதி: ஒரு மதத்தவர் வணங்கும் கடவுளைப் போட்டுடைப்பது அவர்களது மனதை புண்படுத் தாதா? அது தவறல்லவா?

பெரியார்: நான் பிள்ளையார் சிலையை வாங்கும் போது, பலர் அதேபோல வாங்கினார்கள். அவர்கள் எல்லாம் என்ன செய்தார்கள் என்று கேளுங்கள் என்றார்.

நீதிபதி: காவலரிடம்..மற்றவர்கள் என்ன செய் தார்கள் என்று கேட்டார்.

காவலர்: அவர்களும் போட்டுடைத்தார்கள் என்று கூறினார்.

நீதிபதி: அவர்களை ஏன் கைது செய்யவில்லை என்று கேட்டார்.

காவலர்: அவர்கள் கடவுள் உண்டு என்று சொல்லி உடைத்தார்கள். ஆனால் இவரோ கடவுள் இல்லவே இல்லை என்று சொல்லி உடைத்தார் என்று பதில ளித்தார்.

நீதிபதி: இது என்ன வேடிக்கையாக இருக்கிறது? கடவுள் இல்லை என்று சொல்பவர் உடைப்பதில் அர்த்தம் உண்டு. கடவுள் உண்டு என்று சொல்பவர் அவர்கள் வணங்கும் கடவுளையே உடைப்பது நியாயமா? என்று சொல்லி அய்யா நீங்கள் போகலாம் என்றார்.

பெரியார் நன்றி சொல்லிவிட்டு வெளியே வந்தார்.



# பிள்ளையாரைப் போட்டுடைத்த பெரியார்



# அந்த ஆபத்து இங்கு வந்துவிட வேண்டாம்

இந்திய கிரிக்கெட் அணியின் செயல்பாடுகளை நோக்கி இந்தியர் அனைவரின் கவனமும் சமீபத்தில் தென்ஆப்பிரிக்காவில் நிலைகுத்தி நின்றிருந்த வேளையில், அங்கிருந்து ஒரு அபாய சங்கொலி முழங்கியதையும் அவர்கள் கவனிக்க தவறவில்லை.

பல மாதங்களாக குடிநீர் பஞ்சத்தில் உழன்று வரும் அங்குள்ள கேப்டவுன் நகரம் விரைவில் தண்ணீர் இல்லா நகரமாக மாறப்போகும் செய்திதான் அது.

ஆம், தென் ஆப்பிரிக்காவின் இரண்டாவது பெரிய நகரான கேப்டவுனில் தண்ணீர் முற்றிலும் தீர்ந்து பூஜ்ஜிய நிலை ஆகும் நாள் (டே ஜீரோ) மே11ந் தேதி என கணிக்கப்பட்டு இருக்கிறது.

40 லட்சம் மக்களை தன்னுள் அடக்கியிருக்கிற அந்த நகரம் அவர்களுக்கான தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய முடியாமல் ஸ்தம்பித்து கிடக்கிறது.

பருவநிலை மாற்றம் காரணமாக அங்கு கடந்த 3 ஆண்டுகளாக நீடித்த வறட்சி, நகரின் ஒட்டு மொத்த குடிநிர் வினியோகத்தையும் துடைத்து வருகிறது.

நகருக்கு குடிநீர் வழங்கும் அணைக்கட்டுகளில் நீர்மட்டம் வேகமாக காலியாகிறது. இதன்மூலம் தண்ணீர் இல்லாத உலகின் முதலாவது மிகப்பெரிய நகரம் என்ற மோசமான சாதனையை தன்வயப்படுத்த தயாராகி வருகிறது கேப்டவுன்.

இயற்கை மூலம் ஏதாவது அதிசயம் நடந்தால் மட்டுமே இந்த பேரிடரில் இருந்து கேப்டவுன் மக்களை காக்க முடியும் என்ற முடிவுக்கு வந்துள்ள நிபுணர்கள், முடிந்த அளவுக்கு இந்த பேரிடரை தள்ளிப்போட முயன்று வருகிறார்கள்.

இதற்காக பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்களுக்கு கண்டிப்பு காட்டி வருகின்றனர்.

அதாவது நாளொன்றுக்கு 50 லிட்டர் தண்ணீருக்கு மேல் ஒருவர் பயன்படுத்தக்கூடாது : ஷவரை 2 நிமிடங்களே பயன்படுத்த வேண்டும். கார்களை கழுவக் கூடாது கழிவறைக்கு முடிந்த அளவு குறைவான தண்ணீரை பயன்படுத்த வேண்டும், தோட்டம், நீச்சல் குளங்களுக்கு தண்ணீர் கூடாது, வாஷிங் மெஷினங் களுக்கு குறைவான தண்ணீரை உபயோகிப் பதுடன், குளிக்கும் நீரையும் மறுசுழற்சி செய்து பயன்படுத்த வேண்டும் என்பன போன்றவை.

இது ஒருபுறம் இருக்க மறுபுறம் கழிவுநீர் மறுசுழற்சி, ஆழ்குழாய் கிணறு தோண்டுதல், கடல்நீரை குடிநீராக்கும் முயற்சி போன்ற நடவடிக்கைகளையும் அரசு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் ரேஷன் முறையில் குடிநீர் வழங்குவதற் காக 200 குடிநீர் வழங்கல் மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இந்த மையங்களில் மக்கள் நீண்ட வரிசையில் நின்று அன்றைய நாளுக்கான தண்ணீரை வாங்கி செல்லும் நிலை விரைவில் உருவாக உள்ளது.

அப்படி நீண்ட வரிசையில் காத்திருக்கும் மக்களை கட்டுப்படுத்த தனிப்பாதுகாப்பு படையினரும் களத்தில் இறங்க இருக்கின்றனர்.

இன்று குடிநீர் நெருக்கடியில் சிக்கியிருக்கும் கேப்டவுன் நகரம் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை நீர் பாதுகாப்பில் முன்மாதிரியாக திகழ்ந்த நகராகும்.

உதாரணத்துக்கு குடிநீர் வினியோக குாாய்களில் ஏற்பட்டு இருந்த கசிவுகளை அடைப்பதற்கே மிகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டது. இது அற்பமான விஷயம் அல்ல.

ஏனெனில் உலகம் முழுவதும் நகரங்களின் மொத்த குடிநிரில் 30 முதல் 40 சதவீத தண்ணீர் இப்படிப்பட்ட கசிவு மூலமே இழப்பு ஏற்படுவதாக கண்டறியப்பட்டு உள்ளது. அந்த வகையில் கேப்டவுன் நகரம் தண்ணீர் குழாய்களில் ஏற்பட்ட கசிவை தடுத்ததன் மூலமே இத்தகைய இழப்பை கணிசமாக குறைத்து இருக்கிறது.

இதைப்போல நவீன நீர் பாதுகாப்பு கொள்கை களை வகுத்து சிறந்த நீர் மேலாண்மையில் ஈடுபட்டு இருந்த இந்த நகரம், சிறந்த நீர் பாதுகாப்பு கொள்கை களுக்காக 3 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது கடந்த 2015ம் ஆண்டில் (வறட்சியின் தொடக்க காலம்) சர்வதேச விருது கூட வென்றிருந்தது.

அப்படியிருக்கையில் அந்த நகரம் விரைவில் பூஜ்ஜிய நீர் நகராக மாறும் நிலைக்கு தள்ளப்பட்ட தற்கு பல காரணங்கள் உள்ளன.

இதில் பிரதானமாக கூறப்படுவது, கேப்டவுனில் தற்போது ஏற்பட்டு இருக்கும் வறட்சி. இது இந்த நூற்றாண்டில் அந்த நகரம் கண்டிராதது.

அடுத்ததாக பிற நகரங்களை போல ஆழ்குழாய்கள் அல்லது கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் போன்ற குடிநீர் ஆதாரங்களை கொண்டதல்ல கேப்டவுன் நகரம். 99 சதவீதம் தண்ணீருக்கு நீர்த்தேக் கங்களை நம்பியே இருக்கிறது. இந்த நீர்த்தேக்கங் களோ பருவமழையை நம்பித்தான் இருக்கின்றன.

இந்த நீர்த்தேக்கங்களில் கூட நூற்றாண்டுக்கு ஒருமுறை ஏற்படும் இதுபோன்ற வறட்சியை தாங்கும் அளவுக்கு தண்ணீரைத் தேக்க முடியாது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன் முழு கொள்ளளவை எட்டியிருந்த இந்த நீர்த்தேக்கங்களில் தண்ணீர் இருப்பு தற்போது வேகமாக குறைந்து வருகிறது.

இதைப்போல இந்த குடிநீர் பிரச்சினைக்கு பின்னால் அரசியல் காய் நகர்த்தல்களும் இருக்கின்றன. கேப்டவுன் நகரம் அமைந்துள்ள மேற்கு கேப் மாகாணத்தில் ஜனநாயக கூட்டணியின் ஆட்சி அமைந்து இருக்கிறது. அதேநேரம் தென் ஆப்பிரிக்கா வின் தேசிய அரசாங்கமும், பிற மாகாணங்களும் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியால் ஆளப்படு கின்றன.

இதனால் கேப்டவுனின் வறட்சி நிவாரண நடவடிக்கைகளில் தேசிய அரசாங்கம் தொடக்கத்தில் பாராமுகம் காட்டியது. வறட்சியை சமாளிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் மந்த கதியிலேயே இருந்தன. இது நாளடைவில் வீரியமடைந்தது.

இது இப்படி என்றால், கேப்டவுன் மக்களோ வறட்சியை சமாளிக்கும் நடவடிக்கையில் அரசுக்கு எந்த விதத்திலும் ஒத்துழைப்பு கொடுக்கவில்லை. அணைகளில் நீர் இருப்பு வேகமாக குறைந்ததை தொடர்ந்து ஒருவர் நாளொன்றுக்கு 87 லிட்டர் தண்ணீரே பயன்படுத்த வேண்டும் என ஜனவரியில் அறிவித்த அரசு, மீறுவோருக்கு அபராதமும் அறிவித்தது. பின்னர் இது 50 லிட்டராக குறைக்கப் பட்டதுடன், அபராதமும் அதிகரிக்கப்பட்டது.

ஆனால் 60 சதவீதத்துக்கு மேற்பட்ட மக்கள் இந்த அறிவிப்பை சட்டை செய்யவில்லை என கேப்டவுன் நகர மேயர் பாட்ரீசியா டி லில்லி குற்றம் சாட்டி உள்ளார். நகரம் பூஜ்ஜிய நீர் நாளை நோக்கி செல்வதில் பெரும்பாலான மக்களுக்கு கவலை இல்லை என்றுதான் தெரிகிறது என சமீபத்தில் அவர் வருத்தத்துடன் தெரிவித்து இருந்தார்.

இதுபோன்ற பல்வேறு காரணங்களால் கேப்டவுன் இந்த நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறது. இனி

பருவமழை பொழிந்தால் மட்டுமே இந்த பேரிடரில் இருந்து விடுபட முடியும் என்ற நிலையில் வழக்கமாக ஏப்ரல்மே மாதங்களில் தொடங்கும் மழையும் இந்த ஆண்டு ஜூலை வரை தள்ளிப்போக வாய்ப்பு இருப்ப தாக கூறப்படுகிறது.

இன்று கேப்டவுனில் ஒலித் திருக்கும் இந்த அபாய ஒலி, வெறும் தென்னாப்பிரிக்காவுக்கு மட்டு மான எச்சரிக்கை மணி அல்ல. மாறாக ஒட்டுமொத்த உலகுக்கு மானது.

அதேநேரம் இந்தியாவுக்கு மிகுந்த அவசரமு மானது.



அகன்று விரிந்த இந்த பூமிப் பந்து 75 சதவீதம் தண்ணீரால் ஆனது. இதனால் தான் நீலக்கிரகம் என்ற பெயரையும் அது பெற்றிருக் கிறது.

ஆனால் இந்த தண்ணீரில் வெறும் 2.5 சதவீதமே மனிதன் உபயோகப்படுத்தக்கூடிய வகையில் அமைந் திருக்கிறது. அதை பேணி சிறப்பாக நிர்வகிப்பதில்தான் மனித குலத்தின் ஜீவாதாரம் அடங்கி இருக்கிறது.

உலக வெப்ப மயமாதலும் மாறிவரும் பருவ நிலை மாற்றமும் உலக நாடுகளின் நீர் மேலாண்மைக்கு கடும் சவாலாக விளங்கி வருகின்றன. அதுவும் இந்தியா போன்ற வளரும் நாடுகள் தங்கள் நீராதாரங்களை மேம்படுத்துவதில் பின்தங்கி இருக்கின்றன என்றே கூற வேண்டும்.

உலக அளவில் இந்தியாவின் மக்கள் தொகை 16 சதவீதமாக இருக்க, இந்தியர்கள் நீர்வள ஆதாரங் களோ வெறும் 4 சதவீதம் என்றே புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இருக்கும் நீர்வளத்தையும் பெருகி வரும் மக்கள் தொகையும், வேகமான நகரமயமாதலும் அரித்து வருகின்றன.

இந்திய கிராமங்களில் இருந்து நகரத்தை நோக்கி படையெடுக்கும் மக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பதால், நகரங்களின் எல்லைகள் நாளும் விரிவடைந்து வருகின்றன. எங்கு பார்த்தாலும் விண்ணை முட்டும் அடுக்குமாடிகளும், பெரிய மால்களும், தொழிற்சாலைகளும், ஐ.டி.நிறுவனங்களு மாக காட்சியளிக்கின்றன.

இந்த நகர விரிவாக்கத்துக்கு முதலில் பலியாவது நீர்வளங்கே. இதற்கு சென்னை நகரையே உதாரணமாக கூறமுடியும்.

சென்னையில் கடந்த 1980களில் சுமார் 600 ஏரிகள் இருந்ததாக கூறப்படுகிறது. ஆனால் கடந்த 2008ல் வெளியிடப்பட்ட திட்ட அறிக்கையில் விரல் விட்டு எண்ணும் அளவிலான ஏரிகள் உயிர்ப்புடன் இருப்ப தாக கண்டறியப்பட்டது.

கடந்த 1980களில் சென்னையில் 19 ஏரிகளின் நீர்பிடிப்பு பகுதி மட்டும் 1,130 ஹெக்டேராக இருந்தது. ஆனால் 2000களின் தொடக்கத்தில் இதன் பரப்பளவு 645 ெக்டேராக சுருங்கி தற்போது இன்னும் குறைந்திருக்க வாய்ப்பு உள்ளது.

ஏரிகளின் நிலைமை இப்படி என்றால், ஆறுகளின் நிலைமை இன்னும் மோசமாக இருக்கிறது.

சென்னை நகரில் ஓடும் ஆறுகள் ஆக்கிரமிப்புகள் நிறைந்து குடிசைகளாக காட்சியளிக்கின்றன. இந்த அவலங்கள் அனைத்தும் கடந்த 2015ம் ஆண்டு சென்னையை உலுக்கிய வெள்ளப்பெருக்கின் மூலம் வெட்ட வெளிச்சமாகியது.

அந்த ஆண்டு பெய்த மழை காலம் கிடைத்த தண்ணீர் குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்கு போது மானதாக இருக்கும் என வல்லுனர்கள் கணித்தனர். ஆனால் ஆறு, ஏரிகள் ஆக்கிரமிப்பாலும், அரசின் நீர் மேலாண்மை திட்ட குறைபாடுகளாலும் மொத்த நீரும் கடலில் கலந்து வீணானதுடன், அடுத்த ஆண்டே குடிநீருக்கு கையேந்தும் நிலைக்கு சென்னை வாசிகளும் தள்ளப்பட்டனர்.

பெருநகரத்தின் நிலை இப்படி என்றால், தமிழகத்தின் உள்மாவட்டங்களின் நிலையும் இதே கதிதான். ஆறுகள் அனைத்தும் தண்ணீருக்கு பதில் மணல் அள்ளும் எந்திரங்களையே மடியில் ஏந்தி நிற்கின்றன. இதனால் அணைகளும் தொடர்ந்து வறண்டு வருகின்றன.

தண்ணீர் ஓடும் சில ஆறுகளும்கூட ரசாயன கழிவுகளால் நுரை பொங்கி வடிகின்றன. டெல்டா மாவட்டங்களின் உயிர் நாடியான காவிரி, கர்நாடகாவை விட்டு வர மறுக்கிறது. வற்றா ஜீவநதி என வர்ணிக்கப்படும் தாமிரபரணிக்கு குளிர்பான ஆலைகளுடன் மல்லுக்கட்ட வேண்டி இருக்கிறது.

பெரும்பாலான ஏரிகள், குளங்கள் அனைத்தும் வடிவேலுவின் கிணற்றை காணோம் காமெடி போல ஆகிவிட்டன. புதிய அணைக்கட்டு கட்டுமான பணியைக் கண்டு யுகங்கள் ஆகிவிட்டன.

நீர்வளங்களை பொறுத்தவரை தமிழகம் மட்டு மின்றி ஒட்டுமொத்த இந்தியாவின் நிலையும் இப்படித்தான்.

நோய்கள் நீங்குவதற்காக கங்கை நீரை குடித்த காலம் போய், இன்று சில இடங்களில் குளிப்பதற்கு கூட அந்த தண்ணீர் உகந்தது அல்ல என்ற நிலை இருக்கிறது. அதை பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்ட மத்திய அரசின் முயற்சிகள் சுப்ரீம் கோர்ட்டின் கண்டனத்தை பெற்றதுதான் மிச்சம்.

எல் நினோ, லா நினா நிகழ்வுகளால் ஏற்படும் வெள்ளம் மற்றும் வறட்சி பேரிடர்கள் இந்தியாவை பாதிக்கிறது. அத்துடன் நீர்வள மேம்பாட்டில் உள்ள கவனக்குறைவு, ஆழ்குழாய் கிணறுகள் மூலம் கட்டுப்பாடற்ற முறையில் நிலத்தடி நீர் உறிஞ்சுதல், நீர் மாசுபாடு, நீர் மறுசுழற்சியில் கவனம் செலுத்தாதது உள்ளிட்ட காரணங்கள் இந்தியாவின் நீர்வளத்தை பாழாக்குகிறது.

இதனால் இந்தியாவின் பல பகுதிகள் அடிக்கடி குடிநீர் பற்றாக்குறையைச் சந்தித்து வருகின்றன. கடந்த 2016ம் ஆண்டு மராட்டியத்தின் லத்தூர் மாவட்டம் மிகப்பெரும் தண்ணீர் பஞ்சத்தை சந்தித்ததும், இதற்காக ரெயிலில் குடிநீர் வினியோகிக்கப்பட்டதும் நாடறியும்.

இப்படி நீர்வள மேலாண்மையில் தவறிப்போவது நாளைய தலைமுறையை வஞ்சிக்கும் செயல் என்றால் மிகையல்ல. ஏனெனில் இந்திய நகரங்களும் கேப்ட வுனின் ஆபத்தை சந்திக்கும் நிலை வெகு தூரத்தில் இல்லை என்றே நீர்வள வல்லுனர்கள் எச்சரிக்கி றார்கள்.

2020ஆம் ஆண்டு வாக்கில் இந்தியாவின் 21 நகரங்கள் கேப்டவுன் நிலையை சந்திக்கும் என உலக வங்கி எச்சரித்துள்ளது. இதைப்போல 2030ல் இந்தியா வின் நீர் தேவை 1½ லட்சம் கோடி கன மீட்டராக இருக்கும் என உலக வளங்கள் நிறுவனத்தின் அறிக்கை கூறுகிறது. தற்போதைய நீர் வினியோகம் வெறும் 74 ஆயிரம் கோடி கன மீட்டராகவே உள்ளது.

எனவே பெருகி வரும் நீர் தேவையை சமாளிக்கவும், தற்போதைய நிலையை மேம்படுத்தவும் போர்க்கால நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. கிராமங்களில் இருந்து படையெடுக்கும் மக்களுக்கு நகரங்களில் குடியிருப்புகளை மட்டும் ஏற்படுத்தினால் போதாது. அவர்களுக்கு தேவையான குடிநீர் ஆதாரங்களைப் பெருக்கி, தண்ணீரை முறையாக வழங்குவதற்கான திட்டமிடல்கள் மிகவும் அவசியம்.

நீராதாரத்துக்கு வெறும் பருவமழையைச் சார்ந் திருப்பதை விட செயற்கை திட்டங்களிலும் கவனம் செலுத்தவேண்டும். இதற்காக இந்தியாவை சுற்றியிருக் கும் கடல்வளத்தை பயன்படுத்த முனைப்புக் காட்ட வேண்டும். கடல்நீரை குடிநீராக்கும் திட்டங் களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தால் குடிநீர் பஞ்சத்தை எதிர்கொள்வதில் எவ்வித பிரச்சினையும் இருக்காது. இதைப்போல நீரை மறுசுழற்சி செய்வதிலும் விழிப் புணர்வு வேண்டும்.

ஜனநாயக நாட்டில் மக்களின் அடிப்படை உரிமையும், தேவையுமாக இருக்கும் பொருட்களில் முக்கியமானது குடிநீர், ஒவ்வொரு அரசும் சிறந்த நிர்வாகத்துக்கு எவ்வாறு பொறுப்பாகிறதோ, அதைப் போல தனது குடிமக்களுக்கு சுத்தமான குடிநீர், காற்று போன்றவற்றை வழங்கவும் கடமைப்பட்டு இருக்கிறது.

உலக வெப்பமயமாதல், பருவநிலை மாறுபாடு போன்ற சவால்களுக்கு மத்தியில் குடிமக்களின் தாகம் தீர்ப்பதற்கான நடவடிக்கையில் இந்தியா தொலை நோக்குப் பார்வையுடன் செயல்படுவது மிகவும் அவசியம். தவறினால் கேப்டவுன் சோகம் இந்திய நகரங்களுக்கு தொலைவில் இல்லை.

**தள்ளிப்போடப்பட்ட "டே ஜீரோ"**

வேகமாக தண்ணீர் காலியாகி வரும் கேப்டவுனின் பூஜ்ஜிய நிலை நாள் ஏப்ரல் 16 ஆகத்தான் முதலில் கணிக்கப்பட்டு இருந்தது. அப்படியிருக்க க்ரோன் லேண்ட் நீர் உபயோகிப்பாளர் சங்கத்தைச் சேர்ந்த விவசாயிகள், பால்மியட் நதியின் உபரிநீரை கேப்ட வுனுக்கு திறந்து விட தானாக முன்வந்து இருக்கின் றனர்.

கேப்டவுனில் இருந்து சுமார் 65 கி.மீ.தொலைவில் உள்ள கிரபவ் நகரில் இருக்கும் ஐகென்ஹாப் நீர்த்தேக்கத்தில் இருந்து திறந்து விடப்படும் இந்த நீர், கேப்டவுன் குடிநீர் குழாய்களுடன் இணைக்கப்பட உள்ளது. இதைப்போல கேப்டவுனில் விவசாயத்துக்கு பயன்படுத்தும் தண்ணீரின் அளவும் குறைக்கப்பட்டு உள்ளது.

இந்தக் காரணங்களால் கேப்டவுனின் தண்ணீர் இல்லாத நாள் (டே ஜீரோ) மே 11ஆம் தேதிக்கு தள்ளிப் போடப்பட்டு உள்ளது. ஆனாலும் இது நிரந்தரத் தீர்வாக இருக்காது என்றும் இயற்கையின் கடைக்கண் பார்வை கிடைத்தால் மட்டுமே தாக்குப்பிடிக்க முடியும் எனவும் நீர்வள ஆர்வலர்கள் கூறியுள்ளனர். ●

எழுத்தில், பேச்சில், இயல்பில் மறைந்த முதல் அமைச்சர் அண்ணாவுக்கு இணையாக வேறு ஒருவரையும் காட்ட முடியாது. அவர் கட்சி அரசிய லைக் கடந்து தமிழர்கள் அனைவரும் போற்றக்கூடிய மாமனிதராகத் திகழ்ந்தார் என்பதையும் மறுக்க முடியாது.

திராவிடர் கழகத்தில் இருந்து பிரிந்து வந்து திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய போது திராவிடர் கழகத்தையோ, பெரியாரையோ அவர் தாக்கிப் பேசியதில்லை. இரண்டு கழகங்களுக்கும் ஒரே கொள்கைதான். இரண்டும் இரட்டைக் குழல் துப்பாக்கி என்றார்.

பெரியாரை அண்ணா தாக்கிப் பேசாத நிலையி லும் பெரியார், அண்ணாவைப் பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் மோசமாகத் திட்டிப் பேசி வந்தார். அதைப்பற்றி அண்ணாவிடம் தோழர்கள் சொல்லியபோது, 'பெரியார்தானே அப்படிப் பேசுகிறார் பரவாயில்லை. காட்டில் உள்ள யானை, தனது குட்டியைத் தூக்கிப்போட்டுத் தாக்கும்.



# அண்ணாவின் பெருந்தன்மை

## கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன்

எதெற்கென்றால், எதிரிகளின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ள குட்டியைப் பழக்குவதற்கா கத்தான் அப்படித் தாக்கும். அதைப்போல நாமும் எதிரிகளின் ஏச்சையும், பேச்சையும் தாங்கிக் கொள்ளவே நம்மை பெரியார் பழக்குகிறாரே தவிர வேறொன்றும் இல்லை. பெரியார் பேச்சுக்கு பதில் சொல்லி யாரும் மேடைகளில் பேச வேண்டாம்' என்று அண்ணா சொன்னார்.

ஈ.வி.கே.சம்பத் கட்சியை விட்டுப் பிரிந்து போனபோது, 'எனது கடுக்கனில் எண்ணெய் இறங்கி விட்டது, அதைச் சுத்தப்படுத்துவதற் காகக் கழற்றி வைத்திருக்கிறேன். மீண்டும் கடுக்கனை அணிவேன்' என்றார். சம்பத்தை குறைத்துப் பேசவில்லை. அதன் பிறகு அவர் தனிக்கட்சி தொடங்கி, இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தியபோது, இந்தி அரசி தழ் சம்பத்துக்குக் கிடைக்க வில்லை. பல முயற்சிகளுக் குப் பிறகு டெல்லியில் அப்போது பணி யாற்றிக் கொண்டி ருந்த நாகை மாவட்டம் வாழக்கரையைச் சேர்ந்த சம்பத் என்பவரிடம் தொடர்பு கொண்டு கேட் டார் ஈ.வி.கே. சம்பத். இந்த சம்பத் அந்த சம்பத்திடம் தொலைபேசியில் பேசிய போது டெல்லி சம்பத் அருகிலேயே அண்ணா இருந் திருக்கிறார். உடனே அண்ணா, அந்த சம்பத்திடம், 'உடனே இந்த கெசட்டை வாங்கி அனுப்பிவிட்டு மறுவேலை பார்' என்றாராம்.

ஈ.வி.கே.சம்பத் வேறு கட்சி தொடங்கி இருந்த போதிலும், நமது பொது எதிரியான இந்தியைத் தானே எதிர்க்கிறார். அவருக்கு உதவி செய்வதில் தவறில்லை என்றாராம். எவ்வளவு பெருந்தன்மை பாருங்கள்.

நீங்க பலதெய்வ வழிபாட்ட வெறுக்கிறீங்களா, இல்லே, தெய்வ வழிபாட்டையே வெறுக்கிறீங்களா? என்று கேட்கப்பட்டபோது,

அவர் கொஞ்சம் கூடத் தாமதிக்காமல், லட்சுமி, சரசுவதி, பார்வதி, முருகன், விநாயகர், பராசக் திங்கிறதெல்லாம் யாரோ ஓவியர்கள் வரைஞ்சி வச்ச சித்திரங்கள். அதையெல்லாம் ஆண்டவன்னு நம்மாளு கும்பிட ஆரம்பிச்சிட்டான். சுடலைமாடன், காத்தவராயன்கிற பேர்ல அந்த வட்டாரத்துல யாராவது பிரபல மான ஆசாமி இருந்திருப்பான். அவன் செத்ததும் கடவுளாக்கிட்டான் நம்மாளு. கடவுள்ங்கிறவரு கண்ண உருட்டிக்கிட்டு, நாக்கை நீட்டிகிட்டுதான் இருப்பாரா?

அரேபியாவிலே இருக்கிறவன் அல்லான்னான், அதுல சன்னி, சியா, சூஃபி, பாகா என்று பல உட்பிரிவுகளையும் உருவாக்கினான்.

ஜெருசலத்தல இருக்கிறவன் கர்த்தர் ன்னான், அதிலேயும் சிலபேரு மேரியக் கும்பிடாதேன்னான். கிறிஸ்தவ மதத்திலேயே ஏழு, எட்டு, உட்பிரிவுகளை உண்டாக்கிட்டான்.

மத்திய ஆசியாவிலிருந்து வந்தவன். அக்கினி பகவான், ருத்ரன், வாயு பகவான்னு நூறு சாமியச் சொன்னான். நம்ம நாட்டு பூர்வீகக் குடிமக்களான தமிழர்கள் காத்தவராயன், கழுவடையான், முனியன், வீரன்னு கும்பிட்டான்.

எந்தக் கடவுள் வந்து இவன்கிட்டே என்பேரு இதுதான்னு சொன்னான்? அவனவனும் அவனவன் இஷ்டத்துக்கு ஒரு சாமிய உருவாக்கினான்.



# கடவுளைப் பற்றி காமராசர்

ஒவ்வொரு வட்டாரத்துல உருவான ஒவ்வொரு மகானும் ஒரு கடவுள உண்டாக்கி எல்லாரும் தன் கட்சியில் சேரும்படியா செஞ்சான். சுருக்கமாக சொல்ல னும்னா காங்கிரஸ் கம்யூயின்ஸ்ட், தி.மு.க. மாதிரி ஒவ்வொரு மதமும் ஒரு கட்சி.

யார் யாருக்கு எதிலே லாபமிருக்கோ அதுல சேந்துக்குறான்.

மதம் மனிதனுக்குச் சோறு போடு மா?

அவன் கஷ்டங்களப் போக்கு மா?

இந்தக் குறைந்த பட்ச அறிவுகூட வேண்டாமா மனுசனுக்கு?

உலகத்துல இருக்கிற ஒவ்வொரு மதமும், நீ பெரிதா நான் பெரிசான்னு மோதிகிட்டு ரத்தம் சிந்துதே. நாட் டுக்கு நாடு யுத்தமே வருதே.

இப்படியெல்லாம் அடிச்சிகிட்டு சாகச் சொல்லி எந்த ஆண்டவன் சொன்னான்?

தலைவர் தெளிந்த நீரோடை மாதிரி பேசிக் கொண்டே வந்தார். ஒவ்வொரு விஷயத் தைப் பற்றியும் ஒரு அழுத்தமான முடிவை அவர் வைத்திருப்பதைப் பார்த்து நான் வியந்தேன்.

நீங்கசொல்றதப் பாத்தா ராமன் கிருஷ்ணனை யெல்லாம் கடவுளாக்கிட் டானே. அதை ஏத்துக்கிறீங்க போலிருக்கே? என்று வினாத் தொடுத்தேன்.

தலைவர் குலுங்கக் குலுங்கச் சிரித்தார். டேய் கிறுக்கா, நான் சொல்றது ஒனக்கு விளங்கலி யான்னேன்?

ராமன், கிருஷ்ணன்கிறது கற்பனைக் கதாபாத்திரம் னேன். அதையெல்லாம் நம்மாளு கடவுளாக்கிட் டேன்னேன். இன்னிக்கு நம்ம சினிமாவுல வர்ற கதா நாயகனுக்குக் கட்அவுட் வைக்கிறானில்லையா, அதுமாதிரி அந்தக் காலத்துல கதாநாயகன் மாதிரி வருணிக்கப்பட்ட ராமனுக்கும் கிருஷ்ணனுக்கும் கோயில் கட்டிப்புட்டான்.

அந்தப் புத்தங்கள்ல சொல்லப்பட்டிருக்கிற விசயங்கள எடுத்துக்கணும். ஆசாமிய விட்டுப்புடணும். காலப்போக்குல என்னாச் சுன்னா, லட்சக்கணக்கான மக்கள் ராமனை, கிருஷ்ணனையும் கும்பிட ஆரம்பிச் சிட்டான்னு தெரிஞ்சதும், அவுங்களை வச்சி கட்சி கட்ட ஆரம்பிச்சிட்டான் அரசியல்வாதி. அவனுக்குத் தெரியும் ராமன் ஆண்டவன் இல்லேன்னு. ஆனா, அதை வச்சிப் பொழப்பு நடத்தப் பாக்குறானுங்க களவாணிப்பசங்க..

புராணங்களிலே சொல்லப்பட்டிருக்கிற கதாபாத் திரங்கள வச்சித்தான் நம்ம சனங்கள அடிமையா ஆக்கிவச்சிருக்கான். நரகாசுரன் கதையை வச்சி தீபாவளி கொண்டாடுறான். நவராத்திரி கதையைச் சொல்லி சரஸ்வதி பூசை பண்றான். விக்னேஸ்வரனைச் சொல்லி விநாயகருக்குக் கொழுக்கட்டை பண்றான். இது மாதிரி ஏற்பாடுகளை செஞ்சி ஏழை சனங்க ளையும், பாமர சனங்களையும் தன்னோட மதத்தின் பிடிக்குள்ளேயே வச்சிப்பொழப்பு நடத்தறான்.

நான் தீபவாளி கொண்டாடுனதுமில்ல, எண்ணெய் தேச்சிக் குளிச்சதுமில்ல, புதுசு கட்டுனதுமில்ல. பொங்கல் மட்டும்தான் நம்ம பண்டிகைகன்னேன். நம்ம சமூகம் விவசாய சமூகம், அது நம்ம சலாச்சாரத் தோட ஒட்டுன விழான்னேன் என்று விளக்கினார்.

மதம் என்பதே மனிதனுக்கு அபின், அப்படிங்கிற கருத்து உங்களுக்கும் உடன்பாடுதான் போலத் தோணுதே?

நான் தீமிதி, பால் காவடி, அப்படீன்னு போன தில்ல. மனிதனைச் சிந்திக்க வைக்காத எந்த விசயமும் சமுதாயத்துக்குத் தேவையில்ல. பெத்த தாய்க்குச் சோறு போடாதவன் மதுரை மீனாட்சிக்குத் தங்கத் தாலி வச்சிப் படைக்கலாமா? ஏழை வீட்டுப் பெண்ணுக்கு ஒரு தோடு, மூக்குத்திக்குக் கூட வழியில்ல. இவன் லட்சக்கணக்கான ரூபாயில வைர ஒட்டியாணம் செஞ்சி காளியாத்தா இடுப்புக்குக் கட்டி விடறான். கறுப்புப் பணம் வச்சிக்கிறவன் திருப்பதி உண்டியல்ல கொண்டு போய்க் கொட்றான். அந்தக் காசில ரோடு போட்டுக் கொடுக்கலாம். ரெண்டு பள்ளிக்கூடம் கட்டிக் கொடுக்கலாமில்லையா? அதையெல்லாம் செய்யமாட்டான். சாமிக்குத்தம் வந்திடும்னு பயந்துக் கிட்டு செய்வான். மதம் மனிதனை பயமுறுத்தியே




வைக்குதே தவிர, தன்னம்பிக்கையை வளர்த்திருக்கா? படிச்சவனே அப்படித்தான் இருக் கான்னேன் என்றார்.

கோவில் பிரார்த்தனை, நேர்த்திக்கடன் கழிக்கிற துன்னு ஏதாவது நீங்க செஞ்ச அனுபவமுண்டா? அதிலேருந்து எப்போ விலகுனீங்க?

சின்னப்பையனா இருந்தப்போ விருதுநகர்லே பத்ரகாளியம்மன் கோயில் திருவிழா நடக்கும். அந்தக் கோயில் சிலைக்கு ஒரு நாடாரே பூசை செய்வார். அதிலே நான் கலந்துகிட்டிருக்கேன். 1930க்குமுன்னால சஞ்சீவரெட்டியோட திருப்பதி மலைக்குப் போனேன். அவர் மொட்டை போட்டுக்கிட்டார். என்னையும் போட்டுக்கச் சொன்னார்.

நானும் போட்டுக்கிட்டேன். அப்போது யோசிச் சுப் பார்த்தேன். இதெல்லாம் வேலையத்த வேலைன்னு தோணிச்சு. போயும் போயும் கடவுள், தலைமுடியத் தானா கேக்குறாரு? எல்லாம் முடி வெட்டுரவன் தொழில் யுக்தின்னு சிந்திச்சேன், விட்டுட்டேன். ஆனா, சஞ்சீவரெட்டி அதை விடலை. அடிக்கடி மொட்டை போடுவார். தலையில இருக்கிற முடியை எல்லாரும் கொடுப்பானுங்க, ஆனா ஆண்டவனுக்காகத் தலையை கேட்டா கொடுப்பானா? என்று கேட்டுவிட்டு விழுந்து விழுந்து சிரித்தார்.

அப்படியானா, மனிதர்களுக்கும் வழிபாடு, பிரார்த்தனை முக்கியம்னு சொல்றாங்களே, அதப்பத்தி?

அடுத்த மனுசன் நல்லாருக்கணும்கிறதுதான் வழிபாடு ஏழைகளுக்கு நம்மாலான உதவிகளைச் செய்யணும்கிறதுதான் பிரார்த்தனை. இதுல நாம சரியா இருந்தா, தெய்வம்னு ஒன்னு இருந்தா அது நம்ம வாழ்த்தும்னேன்.

காமராசர் என்கிற அந்த மனிதாபிமானி என் மனத்தில், அந்த நிமிடமே சிம்மாசனம் போட்டு உட்காருகிறார். சட்டென்று காரை நிறுத்துகிறார். வழியில் காலில் செருப்போ, மேலுக்குச் சட்டையோ இல்லாமல் நடந்து போன சிறுவர்களைப் பார்த்தது ஏன் பள்ளிக்கூடம் போகலியா? என்கிறார். அவர் இவ்வளவு நேரம் பேசிய பேச்சின் விளக்கம் எனக்குக் கிடைத்து விடுகிறது.









# ஈடு இணையில்லாதது இந்தி எதிர்ப்பு போராட்டம்

உலகில் எல்லாம் வைத்திருந்த ஒரே இனம்....அது தமிழினம்!

தனக்கென பன்னெடுங்காலமாக அரசு, மொழி, இலக்கியங்கள், மருத்துவம், இசை, உழவு, நெசவு, பண்பாடு, வழிபாடு, வணிகம், கடலோடல், நீராடல், கட்டடகலை, ஆடல், விளையாட்டு, போர், வீரம், ஈகம், யோகம் என அனைத்தும் வைத்திருந்தவர்கள் நாமே!

அதை இங்கு வந்தவர்கள் ஒவ்வொன்றாக நம்மிடமிருந்து பறித்தும் அழித்தும் அவர்களுடையது எனவாக்கியும் நம்மை ஏமாற்றினர்.

அப்படி தமிழர்களை ஏமாற்றி தமிழ் மொழியை பின் தள்ளி, வட ஆரியத்தை முன் வைத்து நின்று, இந்தியாவை ஒருங்கிணைக்க ஒரு மொழி வேண்டும் என்ற போர்வையோடு உள்நுழைய எழுந்ததுதான் இந்தி.

அதனை கேள்வி கேட்டு எழுந்தது தான் இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள்.

தமிழகத்தில் தாய்த்தமிழ்ப் பற்றால் பிற மொழி எதிர்ப்பு கனலானது.

ஏற்க மறுத்துவர்களை எதிர்த்து தமிழர்கள் தங்களையே தீய்க்குள் நுழைத்துக் கொண்டு இறந்து போனார்கள்.

அதனாலேயே நமக்கு கிடைத்த இந்திய விடுதலையும் இனிக்கவில்லை. இந்திய குடியரசு நாளையும் நம்மவர்கள் ஏற்க மறுத்து 1965ல் குடியரசு நாளை புறக்கணித்து இந்தி எதிர்ப்பு போராட்டம் நடந்தது.

அதே நாளை நினைவு கூறும் வகையில் தமிழகத்தில் குடியரசு, விடுதலை நாளை கொண்டா டாமல் தமிழகம் புறக்கணித்தே வந்தது.

தமிழறிஞர்களால், மாணவர்களால் கிளர்ந்தெழுந்த போராட்டத்தைப் பயன்படுத்தி ஆட்சிக்கு வந்த திராவிடம் தமிழை தூக்கி போட்டுவிட்டு ஆங்கிலத்திற்கு தூக்கு தூக்கியாகி ஒடுகிறது.

இந்தியை எதிர்க்கிறேன் எனச் சொல்லிக் கொண்டே இந்திக்கு தோள் கொடுத்து தனது ஒத்துழைப்போடே இந்தியை தமிழ்நாட்டு மைல் கற்களிலும் பள்ளிகளிலும் அரசு அலுவலகங்களிலும் என எங்கும் கொண்டு வந்து நிரப்பி விட்டது.

திராவிடம் எந்த போராட்டத்தையும் தனதென சொல்லி ஏமாற்றும். அதுபோலவே இந்தி எதிர்ப்புப் போராட்டங்களும் அவர்களிடம் போய் தோல்வியடைந்து கிடக்கிறது.

இனி, நாம் விழித்தெழ வேண்டிய கட்டாயத்தில் நிறுத்தப்பட்டு இருக்கிறோம்.

இனி தமிழ்நாடு உருப்பட நாம் இழந்துள்ள ஒவ்வொன்றையும் மீட்டெடுப்போம்.

அது மட்டுமே 1937லும் 1965லும் இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும் தமிழ் வாழ்க! என முழக்கமிட்டு உயரீத்த ஈகியருக்கும் அந்த உணர்வை ஊட்டிய பெரியோர்களுக்கும் வீரவணக்கம் செலுத்துவதாகும். செலுத்துவோம்.

வாழ்க தமிழ்மொழி! வாழ்க எங்கள் தாய்நிலம்!

**பாவலர்.மு.இராமச்சந்திரன்**
தலைவர். தமிழ்த் தன்னுரிமை இயக்கம்.



# தமிழ் இலக்கியமும் தமிழர் அறிவியலும்

பழந்தமிழரின் வாழ்வில் அணு வில் தொடங்கி அண்டம் வரை யிலும் அறிவியல் பரவிக் கிடக் கின்றது. இலக்கியம் என்பது வெறும் இரசனைக்குரிய ஒன்றாக மட்டும் இல்லாமல் அனுபவமும் அறிவியலும் கலந்த படைப்பாகவே ஆக்கப்பட்டுள் ளன. அன்றைய தமிழர் கண்ட கனவுகளே இன்றைய நிஜங்களாக உருவாகி வருகின்றன. இன்று நம் வாழ்வின் அறிவியல் வளர்ச்சியின் ஆணிவேராக பழந்தமிழர் வாழ்க்கை அமைந்தது என்றால் மிகையில்லை. இதனைப் பல தமிழ் இலக்கியங்கள் நமக்கு பறைசாற்று கின்றன.



இயற்கை அறிவியல் ஔவை திருக்கு றளின் பெருமையை உரைக்கும்போது,

அணுவைப் பிளந்து ஏழ்கடலைப்
புகட்டி

குறுகத் தெறித்த குறள்.

என்கிறார். அணு என்பது கண் களுக்குப் புலப்படாத மிகச் சிறிய மூலக் கூறு என்பது அறிவியலின் கண்டு பிடிப்பு. ஆயினும் பன்னூறு ஆண்டு களுக்கு முன்பு வாழ்ந்த ஔவை அதனை அறிந்திருந்ததும் அணுவைப் பிளப்பது குறித்து பாடலில் கூறியிருப்பதும் வியப்பிற் குரியது.

**உலகத்தின் தோற்றம்**

ஐம்பூதங்களால் உருவானது இவ்வுலக மெனில் அது எவ்விதம் என்ற கேள்வி அறிவிய லுக்கு சவாலாக அமைந்தது ஒரு காலத்தில். ஆனால்

பரிபாடலில் ஒரு பாடலில்,

*கருவளர் வானத்திசை யிற் தோன்றி*

*உருவறிவாரா ஒன்றன் ஊழியும்*

*உந்து வளி கிளர்ந்த உளமுழ் ஊழியும்*

*சென்தீச் சுடரிய ஊழியும் பணியொடு*

*தன்பெயல் தலை இய ஊழியும் அவையிற்*

*நுண்முறை வெள்ள முழ்கியார் தருபு*

*உள்ளிபிகிய இருநிலத் தூழியும் (பரி.2:5 12)*

என்று கூறப்பட்டுள்ளது. இதில் வானிலிருந்து காற்றும் காற்றிலிருந்து தீயும் தீயிலிருந்து நீரும் நீரிலிருந்து நிலமும் தோன்றிய நிலைகளைக் கூறியுள்ளார். இவை மட்டும் இன்றி கதிரவனில் பிரிந்து பூமி நீண்ட காலத்திற்கு நெருப்புக் கோளமாக இருந்தது என்றும் அது காலப்போக்கில் சிறிது சிறிதாக குளிர்ந்து பனிப்படலமாக மாறி, பின் நெடுநாட்களுக்குப் பிறகு நிலம் தோன்றியது என்றும் உலகத்தின் தோற்றம் குறித்த பல அறிவியல் உண்மைகளை விளக்குகிறது. அறிவியல் தொழில் நுட்பம் இல்லாத காலத்தில் தமிழரின் அண்டம் குறித்த அறிவு எண்ண எண்ண வியப்பிலாழ்த்துகிறது.

### மழை பெய்யும் முறை

மேகம் கடல் நீரை பெற்று மழையாகப் பொழிகிறது என்பது அறிவியல் கண்டுபிடிப்பு. இது ஒரு நாள் ஆய்வின் முடிவல்ல. பல்லாண்டுகளின் பலன். ஆனால் இதனை விளக்கும்முகமாக,

*நிறைகடல் முகந்துராய் நிறைந்து நீர்தளும்பும் தன்*

*பொறை தவிர்பு அசைவிட (பரி. 6:1 2)*

என்று பாரிபாடலில் முகில்கள் கடலின்கண் நீரை முகந்து கொண்டு வந்து ஊழி முடிவின்கண் முழுகுவிக்க முயன்றது போல் மழை பெய்தது என்ற கருத்து கூறப்பட்டுள்ளது. இவை ஆய்வின் வெளிப் பாடுகள் அல்ல அன்றைய தமிழரின் அறிவின் வெளிப் பாடுகள்.

### மருத்துவ அறிவியல்

இன்றைய மருத்துவ உலகம் மனிதனைக் காப்பாற்ற மரணத்தின் வாயில் வரை செல்கிறது. குளோனிங் முறையென்று உயிரின் மாதிரிகளாக புதிய உயிர்களை உருவாக்கும் அளவு வளர்ந்துவிட்டது. ஆனால் மருத்துவ படிப்புகளோ, செயல்முறை பயிற்சிகளோ இல்லாத அந்தக் காலகட்டத்திலும் சித்தர்களும், சிறந்த வைத்தியர்களும் வாழ்ந்துள்ளதை அவர்கள் படைத்த இலக்கியங்கள் நமக்குக் கூறுகின்றன.

*மாதா உதிரம் மலமிகில் மந்தனாம்*

*மாதா உதிரம் சலமிகில் மூங்கையாம்*

*மாதா உதிரம் இரண்டொக்கில் கண்ணில்லை*

*மாதா உதிரத்தில் வைத்த குழவிக்கே (திருமந்திரம்)*

என்று திருமூலர் இயற்றிய திருமந்திரப் பாடலைக் கேட்கும்போது தாயின் உதிரத்தில் மலம் மிகுந்தால் பிறக்கும் குழுந்தை மந்தபுத்தி உடையதாகவும் நீர் மிகுந்தால் குழந்தை ஊமையாகவும் மலம், நீர் இரண்டும் மிகுதியாக இருந்தால் குழந்தை குருடாகப் பிறக்கும் என்ற கருத்துக்கள் இப்பாடலில் பயின்று வருகின்றன. இக்கருத்துக்கள் மருத்துவர்களின் ஆலோசனைகளிலும் அமைந்திருப்பதை அறிய முடிகிறது.

### மாற்றுருப்பு பொருத்துதல்

பழுதுபட்ட ஒரு உறுப்பை எடுத்துவிட்டு வேறொரு உறுப்பைப் பொருத்துதல் என்பது இன்றைய மருத்துவ உலகின் சாதனை, இதனைப் பற்றிய குறிப்பொன்று சிலப்பில் காணப்படுகின்றது.

நாடுவிளங் கொண்புகழ் நடுகதல் வேண்டித்தன்

ஆடு மழைத் தடக்கை யறுத்து முறைசெய்த

பொற்கை நறுந்தார்ப் புனைதேர்ப் பாண்டியன் (சிலம்பு)

கீரந்தையின் இலக்கக் கதவைத் தான் தட்டியதற்குத் தண்டனையாக, தன் கையைத் தானே துண்டித்துக் கொள்கிறான் பாண்டியன். அதன்பின் பொன்னா லாகிய கையைச் செய்து வைத்துக் கொண்டான். அன்றிலிருந்து பொற்கைப் பாண்டியன் என அழைக்கப்பட்டான். என்கிறது அச்செய்தி, உறுப்பினை இழந்த ஒருவன் செயற்கை உறுப்பினைப் பொருத்திக் கொண்டு பயன்படுத்தியதை இப்பாடலில் உணரலாம். மேலும்,

அறிவியல் உலகின் அறிய சாதனையான அறுவைச் சிகிச்சையினை பதிற்றுப்பத்தில்,

*மீன்றேர்கொட்பிற் பனிக்கய மூழ்கிச்*

*சிரல் பெயர்ந் தன்ன நெடுவெள் ளூசி*

*நெடுவசி பரந்த உடுவாழ் மார்பின்*

*அம்புசே ருடம்பினர்ச் சேர்ந்தோ ரல்லது*

*தும்பை சூடாது மலைந்த மாட்சி (பதிற்றுப்பத்து 42: 2 6)*

என்று ஐந்தாம் பத்தின் இரண்டாம் பாடலடியில் போரில் வெட்டுண்ட உடலை வெள்ளுசி கொண்டு தைத்த மருத்துவன் செயலை விளக்குகின்றன. மேலும், இத்தகைய நிகழ்வு ஒன்று புறப்பாடலிலும் காணப்படுகிறது.

*செருவா யுழக்கிக் குருதி யோட்டிக்*

*கதுவாய் போகிய துதிவா யெஃகமொடு*

*பஞ்சியுங் களையாப் புண்ணர் (புறம். 353)*

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனாரின் பாடல் வரிகளில் வெட்டுண்டு கிழிந்த உடல் தசையி னைத் தைத்து மருந்தூட்டி அப்புண்ணின் மேல்

பஞ்சினை வைத்து சிகிச்சை அளித்தமையை உணர்த்து கின்றன. இவை அனைத்தையும் பார்க்கும் போது இன்றைய மருத்துவ முறையின் நவீனமான சிகிச்சைகள் அனைத்தும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழரால் கையாளப்பட்டு வந்துள்ளன என்பது பெருமை கொள்ளச் செய்கின்றன.

**இயற்பியல் அறிவு**

தமிழரின் மருத்துவம் குறித்த அறிவு மட்டுமன்றி அவர்களின் இயற்பியல் அறிவும் நம்மை வியக்க வைக்கிறது. அமுதாம்பிகை பிள்ளைத் தமிழில் ஊசற் பருவத்தில், அமுதாம்பிகை ஊசலாடும் நிகழ்வினைக் குறிக்கும்போது சிவஞான முனிவர்,

*மகரக் குழைகளும் ஊசலாட*

*பங்கய மடமாதர் நோக்கி இருவேம்*

*ஆட்ட அவ்வூசலில் பாய்ந்திலது*

*இவ்வூசல் என நனி ஆட்டுதோறும்*

*நின்னகை நிலவெழிலுக்கு அவர் முகத்*

*திங்கள் சாய (அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் ஊசல் பருவம்)*

என்ற அடிகளில் அமுதாம்பிகை ஆடும் ஊசலின் கயிறு நீளமாக இருந்ததால் மெதுவாக ஆடுகிறது என்றும் ஆனால் அவள் காதில் அணிந்திருக்கும் குண்டலம் குறைவான நீளத்தில் தொங்குவதால் விரைவாக ஆடுகிறது என்றும் கூறியுள்ளார். இதனையே கலிலியோ ஊசலின் நீளம் குறித்த தம் ஆய்வில் "ஊசலின் நீளம் குறைவாக இருந்தால் விரைவாக ஆடும். ஊசலின் நீளம் அதிகமாக இருந்தால் மெதுவாக ஆடும்" என்றும் கூறியுள்ளார். இவ்வாறு ஆய்வுகளின் மூலமாக அறியப்பட்ட பல அறிவியல் உண்மைகள் வெறும் அனுபவத்தின் மூலமாகவும், பண்டைய தமிழர்களின் அறிவுத் தேடலின் விளைவுகளாகவும் பெறப்பட்டதை உணரலாம்.

அன்றைய மனிதன் கண்ட கனவை இன்றைய அறிவியல் முன்னேற்றம் நிஜமாக்கியது. தேடல் இருக்கும் இடத்தில்தான் வெற்றி கிடைக்கிறது. பறவையைக் கண்ட மனிதன் தானும் பறக்க நினைத்தான். இறக்கைகள் இல்லாதபோதும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. விளைவு விமானத்தின் துணையோடு விண்ணில் பறந்தான். இவ்விமானங்கள் பற்றிய பல குறிப்புகள் சங்கப் பாடல்களிலேயே பயின்று வந்துள்ளமையைக் காண முடிகிறது.

வலவன் ஏவ வானவூர்தி (புறம் 27)

எனும் பாடல் அடியில் வானவூர்தி என்ற அற்புதமான சொல் பயன்படுத்தப்பட்டிருப்பதை காணலாம். இதைப்போலவே சிலப்பதிகாரத்தில் கண்ணகி கோவலனோடு ஆகாயத்திலிருந்து வந்திறங்கிய விமான ஊர்தியில் ஏறிச் சென்றதாக ஒரு காட்சி இதனை இளங்கோ,

*வாடா மாமலர் மாரி பெய்தாங்கு*

*அமரர்க் கரசன் தமர்வந் தேத்தக்*

*கோநகர் பிழைத்த கோவலன் தன்னோடு*

*வானவூர்தி ஏறினள் மாதோ*

*கானமலர் புரிகுழல் கண்ணகி தானென் (3:196 -200)*

என்ற வரிகளில் வாடாத பெரிய மலர்களை மழையாகச் சொரிந்து அமரர்களின் அரசனான இந்திரனும் வானோரும் வந்து வாழ்த்த தன் கணவன் கோவலனோடு கண்ணகி தேவ விமானத்தில் ஏறிச் சென்றாள் என்று கூறப்பட்டுள்ளது.

சீவக சிந்தாமணியில் ஒரு காட்சி, கட்டியங்காரன் போருக்கு வந்ததால் சச்சந்தன் தன் மனைவியை காப்பாற்ற அவளை மயிற்பொறியில் ஏற்றி அனுப்பினான் என்பது செய்தி. கட்டியங்காரனின் வெற்றி முழக்கத்தை வான் வழியே கேட்டு விசயை மயங்கி வீழ்ந்தாள். மயிற்பொறி இடப்புறமாகத் திரும்பி ஒரு சுடுகாட்டில் இறங்கி கால் ஊன்றி நின்றது என்பதாக அமைந்துள்ளது. இதனை,

*எஃகு என விளங்கி வான்கண் எறுகடல் அமிர்தம் அன்னாள்*

*அஃகிய மதுகை தன்னால் ஆய்மயில் ஊடும் ஆங்கண்*

*வெஃகிய புகழிவால தன் வென்று வெம்முரசம் ஆர்ப்ப*

*எஃகு எறி பினையின் மாழ்கி மெம்மறந்து சோர்ந்தாள் (நா.இ., பா. 299)*

*என்றும்,*

*பல் பொறி நெற்றிக்*

*குஞ்சிமா மஞ்சை வீழ்ந்து கால்குவித்து இருந்து (நா.இ., பா, 30)*

போன்ற வரிகளிலும் வானவூர்தி பற்றிய செய்திகளைக் காணமுடிகிறது. மேலும் இதன் தொழில் நுட்பம் குறித்து கூறும்போதும், அதன் பொறியினை வலஞ்சுழி, இடஞ்சுழியாக திருகுவதன் மூலம் அவ்வூர்தி வான் மேகங்களிடையே பறக்கவோ, தரையில் இறங்கவோ செய்ய முடியும் என்ற கற்பனை வியப்பிலாழ்த்துவதாக உள்ளது.

தமிழ் இலக்கியங்களை நோக்கும்போது தொகையும் பாட்டுமாக, சித்தர்களின் அரிய பொக்கிஷமாக, நாட்டுப்புற இலக்கியமாக இன்னும் எண்ணற்ற அறிவியல் உண்மைகள் இவற்றுள் பொதிந்து கிடக்கின்றன என்பதை உணர முடியும். இவற்றுள் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் மூலம் மனித இனத்திற்குத் தேவையான பல மகத்தான அறிவியல் அறிவும் பல மருத்துவத் தீர்வுகளும் கிடைக்கும் என்பது தெள்ளத் தெளிவாகிறது. ஆகவே தமிழர்கள் இன்றைய அறிவியல் வளர்ச்சியின் முன்னோடி என்பதை உலகம் உணரவேண்டும்! •




# உலகை ஆண்ட தமிழரின் வரலாறு

தமிழனின் பிறப்பிடமும் தமிழ் மொழியின் பிறப்பிடமும் குமரிக்கண்டம் தான். அக்கண்டம் நீரில் மூழ்கிப் போனது. முச்சங்க வரலாற்றாலும் சிலப்பதி கார உரைகள் மூலம் தெரியலாம். திரு. இராமச்சந்திர தீட்சிதர் போன்றோரின் வரலாற்று நூல்கள் வாயிலா கவும், தேவநேயப் பாவாணர் எழுதிய "முதற்தாய் மொழி" வாயிலாகவும் நாம் நன்கறிகிறோம். தமிழன் தோன்றிய இடம் குமரிக்கண்டம் கையாண்ட மொழி தமிழ் மொழியாகும். பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின் படிப்படியாக வளர்ந்த தமிழும் தமிழனும் புகழின் உச்சக்கட்டம் எட்டினர், பழந்தமிழ் நாட்டை உலகிற்குச் சுட்டிக்காட்டினர்.

குமரிக்கண்டமும் அதன் எல்லைகளும் பழந்தமிழ் நாடாகிய குமரிக் கண்டம் அளவில் மிகப் பெரிதாக பரவியிருந்தது. ஆஸ்திரேலியாவையும் தென்னாப் பிரிக்காவையும் இந்தியாவையும் இணைத்துக் கொண்டிருந்த பெரும் நிலப்பரப்பே குமரிக் கண்டம் அல்லது பழந்தமிழ் நாடு அல்லது இலமூரியா கண்டம் என்கிறார் ஹிராடடஸ், இக்கருத்தை பேரறிஞர்கள் திரு.ஒல்டுகாம், திரு. எக்கேல், திரு. கிளேற்றர், திரு. கட்டு எலியட், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் போன்றோர் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். மேலும் ஹிராடடஸ் அவர்கள் குமரிக்கண்டத்தின் எல்லை யைக் குறிப்பிட்டுள்ளார்.

1. தொலைமேற்கில் கிரேக்க நாடு
2. மேற்கில் எகிப்து மற்றும் ஆப்பிரிக்கா
3. வடமேற்கில் மென் ஆப்பிரிக்கா
4. தொலை கிழக்கில் சீன நாடு
5. கிழக்கில் பர்மா, மலேசியா, சிங்கப்பூர்
6. தெற்கில் நீண்ட மலைத் தொடர்

இம்மலைத் தொடர் ஆஸ்திரேலியாவில் தொடங்கி தென்னாப்பிரிக்காவில் முடிவடைகிறது என்பதை மனதில் கொள்ள வேண்டும். இவற்றின் மையத்தில் அமைந்த மிகப் பெரிய கண்டமே குமரிக்கண்டம் அல்லது பழந்தமிழ் நாடு அல்லது இலமூரியா கண்டமாகும்.

இக்கண்டத்தை பதினான்கு மாநிலங்களாக அதாவது ஏழு தெங்கு நாடு, ஏழு பனை நாடு என பிரித்திருந்தனர். அந்நாட்டில் வாழ்ந்தவன் தான் தமிழன். அவன் கையாண்ட நாகரிகம்தான் தமிழர் நாகரிகம். அவனுடைய வரலாறும் நாகரிகமும் தான் உலகிலேயே முதன்மை வாய்ந்தது.

தமிழர்கள் தமிழ்நாட்டிலிருந்து கடல் வழியாகவும், தரை மார்க்கமாகவும்உலகெங்கும் சென்று குடியேற்றங் களை அமைத்து தமிழ் மொழியையும், தமிழ்ப் பண் பாட்டையும், தமிழ்க் கலாச்சாரத்தையும் பாரெங்கும் பரப்பினர் என்பதே உண்மை. இதற்குச் சான்றாக பினீ சியர்களின் நாணயங்களும் கல்வெட்டுக்களும் உதவு

கின்றன. கம்போடியாவில் உள்ள உலகின் மிகப் பெரும் கோவிலையும் இதற்கு சான்றாக எடுத்துக் காட்டலாம். இங்குதான் உலகின் முதல் மனிதன் பிறந்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள், இங்கு தான் நம் மூதாதையர் வாழ்ந்தனர். இங்குதான் நாம் இன்று பேசிக்கொண்டிருக்கும் நம் தாய்த் தமிழ் பிறந்தது. இங்குதான் இன்னும் பல வரலாற்று அதிசயங்கள் நிகழ்ந்துள்ளன. ஆம், இதுதான் "நாவலன் தீவு" என்று அழைக்கப்பட்ட "குமரிப் பெருங்கண்டம்".

கடலுக்கடியில் இன்று அமைதியாக உறங்கிக்கி கொண்டிருக்கும் இது, ஒரு காலத்தில் பிரம்மாண்ட மாக இயங்கிக்கொண்டிருந்த ஒரு மாபெரும் தமிழ்க் கண்டம்! இன்று தனித்தனி நாடுகளாக உள்ள ஆஸ்திரேலியா, மட காஸ்கர், தென்னாப் பிரிக்கா, இலங்கை, மற்றும் கிழக்கில் உள்ள சில சிறு, சிறு தீவுகளை யெல்லாம் இணைத்தவாறு இருந்த ஒரு பிரம்மாண்ட நிலப்பரப்பு தான் "குமரிக் கண்டம்". ஏழுதெங்க நாடு, ஏழு மதுரை நாடு, ஏழு முன்பலை நாடு, ஏழுபின்பலை நாடு, ஏழுகுன்ற நாடு, ஏழுகுனக்கரை நாடு, ஏழு குரும்பனை நாடு என இந்நிலப்பரப்பில் நாற்பத் தொன்பது நாடுகள் இருந்துள்ளன! பறுளி, குமரி என்ற இரண்டு மாபெரும் ஆறுகள் ஓடியுள்ளன!

குமரிக்கொடு, மணிமலை என இரண்டு மலைகள் இருந்துள்ளன! தென்மதுரை, கபாடபுரம், முத்தூர் என பிரம்மாண்டமான மூன்று நகரங்கள் இருந்தன. உலகின் தொன்மையான நாகரீகம் என்று அழைக்கப் படும் சுமேரியன் நாகரீகம் வெறும் நான்காயிரம் வருடங்கள் முந்தையது தான்.

நக்கீரர் "இறையனார் அகப்பொருள்" என்ற நூலில் மூன்று தமிழ்ச் சங்கங்கள் 9990 வருடங்கள் தொடர்து நடைபெற்றதாக கூறியுள்ளார். தமிழின் முதல் சங்கம் இந்த கடலடியில் உள்ள "தென்மதுரையில்" கி.மு 4440இல் 4449 புலவர்களுடன் , சிவன், முருகர், அகஸ்தி யருடன் 39 மன்னர்களும் இணைந்து நடத்தப்பட்டது. இதில், "பரிபாடல், முதுநாரை, முடுகுருக்கு, கலரியவிரை, பேரதிகாரம்" ஆகிய நூல்களை இயற்றியுள்ளனர். இதில் அனைத்துமே கடற்கோளில் அழிந்துவிட்டன. இரண்டாம் தமிழ்ச் சங்கம் "கபாடபுரம்" நகரத்தில் கி.மு 3700இல் 3700 புலவர்களுடன் நடத்தப் பட்டது.

அதில், "அகத்தியம், தொல் காப்பியம், பூதபுராணம், மா புராணம்" ஆகிய நூல்கள் இயற்றப்பட்டன. அதில் "தொல்காப்பியம்" மட்டுமே நமக்கு கிடைத்துள்ளது. மூன் றாம் தமிழ்ச் சங்கம் இன்றைய "மதுரையில்" கி.மு 1850 இல் 449 புலவர்களுடன் நடத்தப்பட்டது. இதில், "அகநானூறு, புறநானூறு, நாலடியார், திருக்குறள்" ஆகிய நூல்கள் இயற்றப்பட்டன.

வெளிக்கொண்டுவராத நம் வரலாற்றை, நாமே இந்த உலகிற்குப் பரப்புவோம். இனிமேல் நாம் 2000 வருடம் பழமையானவர்கள் என்ற பழங்கதையை விட்டு விட்டு 20,000 வருடத்திற்கும் பழமைவாய்ந்த உலகின் முதல் இனம் நம் தமிழினம் என்று பெருமையுடன் கூறுவோம். ●


**முற்றம் மாத இதழ்**
**உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள்**

வெளியிடும் இடம் **:** 13/5 புத்தா தெரு,
கோடம்பாக்கம், சென்னை - 600 024

வெளியிடும் காலம் : **மாதம் ஒரு முறை**
அச்சிடுபவர் : **டிசைன்ஸ்பார்க்**
இந்தியக்குடிமகனா? : **ஆம்**
முகவரி: **டிசைன்ஸ் பார்க்**
22, வீவர்ஸ் தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005

உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் :
**வே.தளபதி**
இந்தியக் குடிமகனா? : **ஆம்**
ஆசிரியர் பெயர் : **வே. தளபதி**
முகவரி : 13/ 5 புத்தா தெரு, கோடம்பாக்கம்,
சென்னை - 600 024

*வே. தளபதி ஆகிய நான் மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள்*
*அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கிறேன்*

ஒப்பம்

**வே.தளபதி**
வெளியிடுபவர்
தேதி : 17.03.2018



**முற்றம் இதழுக்கான விளம்பரக் கட்டணங்கள்**

**பின்னட்டை பல வண்ணம் ரூ. 10,000/-**
**பின் உள் அட்டை பல வண்ணம் ரூ. 7,000/-**
**கருப்பு வெள்ளை முழுபக்கம் ரூ. 5,000/-**
**கருப்பு வெள்ளை அரைப் பக்கம் ரூ. 2500/-**
**க. வெ. கால் பக்கம் ரூ. 1500/-**

**சந்தா விவரம்: தனி இதழ் ரூ. 10/-**
**ஆண்டு சந்தா ரூ. 120/-**



# தொழில் நுட்பச் சிகரம் கல்லணை

2000 ஆம் ஆண்டுகளுக்கு முன் பெருவெள்ள நீரைத் தேக்கி வைக்கும் மனித ஆற்றலின் சின்னம் கல்லணை. மண்ணின் செழிப்புக்கும் மக்களின் மலர்ச்சிக்கும் வித்திட்ட தமிழ் வேந்தன் கரிகால்பெருவளத்தான் ஆக்கம்! கரிகாலன். காலம் கடந்து நிற்கும் பொறியியல் நுட்பத்திற்கு சான்று.

செயற்கையாக எதுவும் பூசாமல் கற்களை ஆற்றில் அடுக்கியே கட்டப்பட்ட அணை கல்லணை. ஓடும் நீரில் ஆற்றின் படுகையில் ஒவ்வொரு கல்லாக போட்டு நிரப்பினார்கள். அவை நீர்ப் பறிப்பினால் மணலின் அடியாழத்துக்குச் சென்று அகலமான அடிப்பாகமாக சென்று இயற்கை யான அடித்தளத்தை உருவாக்கின. அடுத்தடுத்து மேலே போடப்பட்ட கற்கள் இயற்கைச் சுவர்களாக அமைந்தன.

இப்படியாக ஓடும் நீரின் அடியில் மணல் படுகையில் எழுப்பப்பட்ட உறுதியான கருங்கல் தளத்தின் மீது எழுப்பப் பட்டதே கல்லணை ஆகும்.

திருச்சி அருகே அமைந்துள்ள இக் கல்லணையின் நீளம் 1080 அடி அகலம் 66 அடி உயரம் 18 அடி. இந்த அணையின் தொழில்நுட்பத்தை பின்பற்றித்தான் இந்திய நீர்ப்பாசனத்தின் தந்தை என அறியப்படும் ஆங்கில பொறியாளர் ஆர்தர் காட்டன் 1874-இல் ஆந்திராவின் கோதாவரியில் தௌலீஸ்வரம் அணையைக் கட்டினார்.

அதோடு மட்டுமல்லாது கரிகாலன் கட்டிய கல்லணையை 'மகத்தான அணை' (Grand Anicut) என்ற பெயர் சூட்டி அழைத்ததோடு, அதன் மீது மேற்கட்டுமானத்தை அமைத்தார்.

நாம் கடற்கரையின் ஓரத்தில் நீரில் சென்று நின்றால், அலையடித்து வந்து நம் காலைத் தழுவிச் செல்லும். அலையடித்துச் சென்ற பிறகு, நம் பாதங்களுக்கு கீழ் உள்ள சிறிது மணல் அரிக்கப் பட்டு, சிறிய குழி ஏற்பட்டு பாதம் புதையும். இந்த தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு கரிகாலனின் கல்லணையை கட்டியது செயற்பொறியியலின் உச்சம்.


Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**



ஆதி திரைக்களம்
முந்திரிக்காடு
மு.களஞ்சியம்
இசை A.K.பிரியன் | ஒளிப்பதிவு G.A.சிவசுந்தர் | படத்தொகுப்பு LVK தாசன்
மூலக்கதை இமையம் | கலை மயில் | சண்டை லீமுருகன் | நடனம் மெட்டிஒலி சாந்தி |
பாடல்கள் கவிபாஸ்கர் | உடை மதிவாணன் | ஒப்பனை கோபி | நிழற்படம் தஞ்சை ரமேஷ் | மேலாளர் B.V. குமார்
சிறப்பு சப்தம் A. சதீஷ்குமார் | DI & VFX மூர்த்தி | மக்கள் தொடர்பு மௌனம் ரவி | வடிவமைப்பு சிந்துகிராபிக்ஸ்
தயாரிப்பு
ஆதி திரைக்களம்

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

